Registered No. M. 2385.

உ

முருகன் துணை

விவேகபாநு

ஓர் இனிய செந்தமிழ் மாதப் பத்திரிகை

"தோட்டனைத் தூறு மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத் தூறு மறிவு"—திருக்குறள்.

"நன்மை கடைப்பிடி" "நாடொப்பன செய்" "உத்தமனாயிரு

மாலை—க. விபவ ஹூ மார்கழி மீ 1928, 9ஹூ டிசம்பர், ஜனவரி மீ மலர்—அ

கடவுள் வணக்கம்

ஒருமையுட னினதுதிரு மலரடி நினைக்கின்ற
வுத்தமர்த முறவு வேண்டும்
உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுவார்
உறவுகல வாமை வேண்டும்
பெருமைபெறு நினதுபுகழ் பேசவேண்டும் பொய்மை
பேசா திருக்க வேண்டும்
பெருநெறி பிடித்தொழுக வேண்டுமத மானபேய்
பிடியா திருக்க வேண்டும்
மருவுபெண் ணாசையை மறக்கவே வேண்டுமுனை
மறவா திருக்க வேண்டும்
மதிவேண்டு நின்கருணை நிதிவேண்டு நோயற்ற
வாழ்வினான் வாழ வேண்டும்
தருமமிகு சென்னையிற் கந்தகோட் டத்துள்வளர்
தலமோங்கு கந்த வேளே
தண்முகத் துய்யமணி யுண்முகச் சைவமணி
சண்முகத் தெய்வ மணியே. (8)

282

முருகர் தியானம்

(முன் தொடர்ச்சி.)

ஆம்பூர், தமிழ்ப்பண்டிதர், ஸ்ரீமான்

எம். எல். வீரராகவ தாதாசாரியர் அவர்கள்

எழுதுவது

தண்ணருளை வரையாது அளிக்கும் வேல்முருகா!
மண்ணிலடியா ரிருவினை யடித்த வேல்முருகா!
இத்தகைய கஷ்டத்தைப் போக்க வரும்முருகா!
வித்தகக் கருணைமுகி லெனப்பெய ரெடுத்தமுருகா! 5

சித்திரக் கலபமயிலேறி விளையாடு முருகா!
இத்திறத் தானைக் காப்பாயென நம்புகிறேன் முருகா!
ஆவினன்குடி குளிரவந் தருளிய வென்முருகா!
பாவியா னெனைக்காக்க வருவாய் முன்முருகா! 6

திருபுர மெரித்தவ னதுமைந்தனே முருகா!
திருநீல கண்டனெனத் துதிக்கும் வேல்முருகா!
சரவணப் பொய்கைதனில் ஆடிய வேல்முருகா!
அரவணைமேல் பள்ளியவ னருளிய வேல்முருகா! 7

வேட்டுவனும் வந்துபுனங் கடைக்கணித்த முருகா!
பூட்டுவார் சிலைக்கைப் பூவையை மணந்தவனே முருகா!
பிட்டுக்கு மண்சுமந்து பிறம்படிபட்டவ னதுமுருகா!
கட்டுக்கடங்காத கஜமுகனை வேண்டிய வேல்முருகா! 8

(பின் தொடரும்)

நீங்கள் ஆனந்தமாக பொழுதுபோக்க விழைந்தாலும், பிரபஞ்ச விநோதங்களைக்காண விரும்பினாலும், கல்வி, கேள்வி, ஒழுக்கங்களில் சிறந்து விளங்கவேண்டுமானாலும், நமது விவேகபாநுவை வாங்கி வாசியுங்கள். இதற்கு வருடசந்தா ரூபா 1-0-0 உடனே சந்தாதாரர்களாகச் சேருங்கள்.

சீர் திருத்தம்.

எமது அன்பார்ந்த தமிழ் நாட்டுச் சகோதர சகோதரிகளே! இதுகாலை நம் நாட்டுமக்கள் பல்வகையிலும் சீர்திருத்தம் பெறவே முயற்சித்து வருகின்றனரென்பதை பொது விஷயங்களை அறிவதில் கவனஞ் செலுத்திவரும் ஒவ்வொருவரும் அறிந்திருப்பார்களென்றே நம்புகிறோம். எப்பக்கம் திரும்பிப் பார்த்தாலும் சீர்திருத்தப் பேச்சாகவே இருக்கிறது. ஒரு சிலர் சமூக சீர்திருத்தம் வேண்டுமென்கின்றனர். மற்றுஞ் சிலர் ராஜீய சீர்திருத்தம் விழைகின்றனர். ஒவ்வொரு மதத்தினரும் தத்தம் மத சீர்திருத்தத்தையும் விரும்பியே நிற்கின்றனர். அனைவரும் அவ்வாறு விரும்புவதற்கும் ஆதாரமில்லாமற் போகவில்லை. எந்தவிதமான ஒரு கொள்கையையோ அல்லது வழக்கத்தையோ நாம் அநுஷ்டித்தபோதிலும் அது இயற்கையாகவே நாளடைவில் மாறுபடுகின்றது. இவ்வாறு மாறுபடுவதால் ஆதி கொள்கையும் வழக்கமும் உருக்குலைந்து வேற்றுருவம்கொண்டு மக்களைத் துன்பத்திலாழ்த்தி விடுகின்றன. மற்றும் சில கொள்கைகளோ அல்லது வழக்கங்களோ சிறிதும் மாறுதலடையாமலிருந்தபோதிலும், காலதேச வர்த்தமானங்களுக்கேற்ப அவற்றை மாற்றிக்கொள்ள வேண்டிய அவசியம் ஏற்படுகின்றது. எனவே கொள்கைகளையும் ஆசார அனுஷ்டானங்களையும் நிலைமைகளையும் காலதேச வர்த்தமானங்களுக் கேற்றவாறுசெப்பஞ் செய்துகொள்ள முயற்சிப்பதுதான் சீர்திருத்தமாகும். ஆதலின் சீர்திருத்த முறைகளையும் முயற்சிகளையும் அறிஞர்கள் எவரும் மறுக்கத் துணிய மாட்டார்கள். ஆனால் சீர் திருத்தம் செய்ய முயல்வோர் சுயநலப்பேய் பிடியாதவராகவும், அன்பே அவதார மெடுத்தவராகவும், நாட்டு மக்களைச் சகோதரர்களாக பாவிக்கும் சுபாவமுடையவராகவும், எல்லாம் வல்ல இறைவனிடம் பக்திபூண்டு ஒழுக்கத்திற் சிறந்தவராகு

வும் அஞ்சா நெஞ்சம் படைத்தவராகவும் இருத்தல் அத்தியாவசியமாகும். இத்தகைய தூயகுணங்களை யுடையவர்களே சீர்திருத்தம் செய்வதற்குரியவராவர். உலகில் அக்கிரமங்கள் அதிகரிக்கும் காலத்து துஷ்ட நிக்ரஹ சிஷ்டபரிபாலனம் செய்யும் பொருட்டு இறைவன் திருத்தூதர்களை அனுப்புவா ரென்பது பகவத்கீதையின் கருத்தாகும். அவ்வாறே இஸ்லாம் மதத்தின் திருத்தூதரான நபிகள் நாயகம் முகம்மது நபிகள்பிரான் அவர்களும் நூறு வருஷங்களுக்கொருமுறை சீர்திருத்தம் செய்யும்பொருட்டுச் சீர்திருத்தக்காரர் ஒருவர் தோன்றுவார் எனத் திருவாய் மலர்ந்தருளியுள்ளார். கிறிஸ்தவ சகோதரர்களும் மக்களுக்கு எச்சரிக்கை செய்யும் பொருட்டு அப்போதைக்கப்போது தீர்க்க தரிசிகள் தோன்றுவார்களென்று ஒப்புக்கொள்கின்றனர். இவற்றின் உட்கருத்தென்ன? அப்போதைக் கப்போது சீர்திருத்தம் செய்யப்படல்வேண்டும் என்பதுதான் அல்லவா? எனவே சீர்திருத்தம் அவசியம் என்புது பெறப்பட்டது.

நம் நாட்டு நிலைமைக்கேற்ப நமக்கு வேண்டிய சீர் திருத்தங்களைப்பற்றி எமக்குத் தெரிந்தவரை சிலவற்றை அறிவிக்க விரும்புகின்றோம். இந்நாட்டு அறிஞர்களும், சீர்திருத்தக் காரர்களும் அவற்றை ஏற்றுக்கொள்வார்க ளென்னும் நம்பிக்கை எமக்கு உண்டு. சமூக சீர்திருத்தம் அவசியமா அல்லது ராஜீய சீர்திருத்தம் அவசியமா என்னும் கேள்வி நாட்டில் நிலவி வருகிறது. சிலர் முதலில் ராஜீயத்தைப் பார்த்துக்கொண்டு நாடு சுதந்தரமடைந்தவுடன் சமூக சீர்திருத்தத்தில் இறங்கி வேலை செய்யலாமெனக் கூறுகின்றனர். வேறு சிலர் சமூக சீர்திருத்தம் பெற்றபின்னரே ராஜீய சீர்திருத்தம் பெறவேண்டுமென்கின்றனர். இரண்டையும் ஏக காலத்தில் செப்பஞ் செய்துகொண்டு போகவேண்டு மென்பதே எமது ஆழ்ந்த கருத்து. ஏனெனில் ராஜீய விடுதலை பெற்று சுதந்தரமடையாத பட்சத்தில் சமூக சீர்திருத்தம் பூர்த்தியாகப் பெறமுடியாது.

அவ்வாறே சமூக சீர்திருத்தத்துக்கும் நாம் இடம் கொடுத்து சிறுகச்சிறுக அதில் முன்னேறி வந்தால்தான் பரஸ்பரம் நாட்டு மக்களிடையே ஒற்றுமையும் அன்பும் நிலவி, ராஜீய சுதந்தரத்திற்காகப் போராடத்தக்க பலம் ஏற்படும். மேலும் இருவகை சீர்திருத்தக்காரர்களும் ஒன்றுபட்ட மனத்துடன் உழைத்தால்தான் நாட்டுக்கு விமோசனமுண்டு. ஒன்றுக்காக மற்றொன்று தடைப்படவேண்டிய அவசியமே இல்லை. ஒரு கூட்டத்தாரை மற்றொரு கூட்டத்தார் குறைகூற வேண்

டிய அவசியமுமில்லை. இப்போது பொதுவாக இந்தியாவிலும் சிறப்பாக நமது தமிழ் நாட்டிலும் ராஜீய சீர்திருத்தக்காரர்களும், சமூக சீர்திருத்தக்காரர்களும் ஒருவரோடொருவர் முரண்பட்டு வீண் கிளர்ச்சிகளை உண்டாக்கி வருவது வருந்தத்தக்க விஷயமாகும். சமூக சீர்திருத்தம் வேண்டுமென்பதற்காக, நாட்டை அடிமைத்தனத்திலும் வறுமையிலும் வைத்துக்கொண்டு தேசீய முன்னேற்றத்தைத் தடுக்க முயற்சிப்பது நீதியன்று. தேசீய வாதிகளும் சமூக, ஆசார சீர்திருத்தங்களுக்கு ஆதரவளித்து வந்தால் நாட்டில் ஒற்றுமையும் உண்மைச் சகோதரத்துவமும் நிலவ வழி ஏற்படும் என்பதை அறியவேண்டும் உண்மையான ஒற்றுமையும் சகோதரத்துவமும் ஏற்பட்டாலன்றி தேசீய விடுதலையும் பெறமுடியாது. எனவே சமூக சீர்திருத்தக்காரர்களும், ராஜீய சீர்திருத்தக்காரர்களும் ஒற்றுமையுடன் வேலைசெய்ய வேண்டு மென்பதுதான் எமது மனமார்ந்த விருப்பமென்பதை மீண்டும் அறிவித்துக்கொள்ள விரும்புகின்றோம்.

இப்போது சமூக சீர்திருத்தத்தைப் பற்றிச் சிறிது விவரமாக ஆராய்வோம். சீர்திருத்தம் என்றால் மூலக்கொள்கைகளை வேருடன் ஒழித்துவிடுவதென்பதன்று. மேலும் கண்டபடி யெல்லாம் தாறுமாறான முறையில் மாற்றிவிடுவதென்பதுமன்று. சீர்திருத்தம் என்பதற்கே நேரானமார்க்கத்தில் திருத்துவதென்பதே பொருள். நேரான மார்க்கம் என்பதால் மூலக்கொள்கைக்கு ஹானி ஏற்படாதவாறும், மக்களுக்குத் துன்பம் விளையாதவாறும், காலதேசவர்த்தமானங்களுக்கேற்றபடியும், ஆன்ற அறிஞர்களால் ஒப்புக்கொள்ளக்கூடிய முறையிலும் திருத்துவது என்பதுதான் சரியான பொருளாகும். எனவே நாம் மேலே கூறியவாற்றால் சீர்திருத்தம் அவசியம் என்பதும், அதை நேரான மார்க்கத்தில் அனுஷ்டிக்கவேண்டு மென்பதும் நன்கு புலனாகின்றது. சமூக ஆசார சீர்திருத்தங்களைச் சில வைதிகர்களென்போர் மறுக்கின்றனர். ஆனால் அவ்வாறு மறுப்பவர்களின் மனப்பான்மை மிக்க விசால நோக்கமுடையதன்று என்பதே எமது கொள்கை. சமூக சீர்திருத்தத்திலும் பலவகைத் திருத்தங்கள் வேண்டப்படுகின்றன. உதாரணமாக, பிறப்பினால் உயர்வுதாழ்வு பாராட்டுவது கூடாது என்றும், கடவுளுக்கும் மனிதனுக்குமிடையில் தரகர்களைப்போன்ற புரோகிதர்கள் வேண்டாமென்றும் கூறுகின்றனர். இவற்றை நாம் ஆதரிக்கின்றோம். ஆதிகாலத்தில் தொழில் வேற்றுமையால் ஜாதிப் பாகுபாடுகள் வகுக்கப்பட்டனவென்றும், அவர்களிடையே எத்தகைய உயர்வு தாழ்

வும் இருந்ததில்லை யென்றும், அனைவரும் சகோதரத்துவத்துடன் நாட்டின் க்ஷேமமென்னும் பொதுவான நோக்கத்துக்காகவே உழைத்து வந்ததாகவும் தெரிகின்றது. ஆனால் இக்காலத்திலோ பிறப்பினால் ஜாதியைப் பிரித்து உயர்வு தாழ்வு பாராட்டுகின்றனர். இதை அறிஞர்கள் எவ்வாறு பொறுத்துக் கொண்டிருத்தல் கூடும். இரண்டாவதாக மக்கள் ஆண்டவனை நோக்கிச் செய்யவேண்டிய காரியங்களுக்குப் புரோகிதர்களென்னும் தரகர்கள் அவசியமில்லை. அவரவரும் சுயமே தங்கள் பரமபிதாவாகிய இறைவன்பால் நெருங்கிப் பக்தியுடன் அப்பரந்தாமனைப்போற்ற உரிமையுடையவர்களே! எனவே ஜாதிவித்தியாசம் தொலைந்து புரோகிதம் ஒழியவேண்டுமென்று சொல்வதில் ஏதும் குற்றமிருப்பதாகத் தெரியவில்லை. பிராமணர்கள் தாங்களே உயர் பிறவியினர் என்றும், அவர்கள் பிராமணர்கள் என்னும் அச்சமூகத்தில் பிறந்துவிட்டதனாலேயே எத்தகைய ஒழுக்கக் கேடான, இழிய காரியங்களைச் செய்து கொண்டும், தங்கள் ஆசாரம், கடமை, ஒழுக்கம் முதலியவைகளைச் செய்யாமல் தவறிக்கொண்டு மிருந்தபோதிலும் தாங்களே மற்ற ஜாதியினரைக் காட்டிலும் உயர்வானவர்கள் என்றும், நேரே மோட்சம் செல்லத் தங்களுக்கு உரிமை யுண்டென்றும் நினைப்பார்களாயின் அத்தகைய அகம்பாவத்தை மற்றை ஜாதியினர் எவ்வாறு பொறுத்துக்கொண்டிருத்தல் கூடும்? ஆனால் அத்தகைய பிராமணர்கள் மீது குறைகூறிவிட்டு பிராமணரல்லாதார் தங்களுக்குள்ளேயே ஜாதி வித்தியாசங்களையும் உயர்வு தாழ்வுகளையும் வைத்துக்கொண்டிருந்தால் அதுவும் நீதியாகாது. மேற்கூறிய சீர்திருத்தத்தை விரும்புவோர் ஆதி வருணாசிரம தர்மத்தையே அடியோடு ஒழிக்க முயற்சிப்பதும் நீதியன்று; அக்காலத்து வருணாசிரமம் தொழில்முறை பற்றியே, நாட்டின் நலத்துக்காகவே வகுக்கப்பட்டது. இப்போது அவ்வாறில்லை யென்றால்அவ்வாறிருக்கும்படி செய்யக்கூடிய அரசியல்முறையை நிலவச் செய்வதே ஏற்ற முறையாகும்.

இரண்டாவதாக, தீண்டாமை ஒழியவேண்டும். இதைச் சமூக சீர்திருத்தக்காரர்கள் மட்டுமேயன்றி அரசியல் கட்சியினரும் தங்கள் வேலைத் திட்டத்தில் சேர்த்துக்கொண்டிருப்பதற்காக நாம் பெரிதும் சந்தோஷப்படுகின்றோம். தீண்டாமை என்பது ஹிந்து சமூகத்துக்கு ஏற்பட்டுள்ள ஒரு பெருந்திட்டு என்று மகாத்மா காந்தி சொல்லுகின்றார். அக்காலத்திலும் நான்கு ஜாதிகளைமட்டும் வகுத்தனரே யன்றி ஐந்தாவதாகிய பஞ்சமர்களைப் பிரிக்கவில்லை; ஆனால் கர்மபிரஷ்டர்க

ளைச் சண்டாளர்களெனக்கூறி அன்னாரைப் பகிஷ்கரித்து வந்தார்களே யன்றி அவர்களுடைய பரம்பரையையே ஒதுக்கி வைக்கவேண்டு மென்று எந்த சாஸ்திரமும் கூறுவதாகத் தெரியவில்லை. இக்காலத்தில் புலாலுண்போர் புலையர் என்றும் கூறமுடியாது. பிராமணர் முதல் எல்லா ஜாதியினரிலுமே பலர் புலாலுண்பதுடன் கர்ம பிரஷ்டர்களா கவும் இருக்கின்றனர்கள். எனவே குறிப்பிட்ட ஒரு வம்சத்தினரை ஒதுக்கிவைத்து அவர்கள் இவ்வுலக வாழ்விலும், மறு உலக வாழ்வி லும் எத்தகைய முன்னேற்றமும் அடைய முடியாதபடி அவர்களை ஆழ்த்திவைத்திருப்பது பெரும்பாவமாகும். இந்திய நாட்டின் ஜனத் தொகையில் ஐந்திலொரு பங்கினரான அச்சமூகத்தினரை அடக்கி ஒடுக்கி வைத்திருக்கும் வரையில் நம் நாட்டுக்கு விமோசனமேது? அச் சமூகத்தினரிலும் பக்திமான்களும், அரசியல் நிபுணர்களும், அறிஞர் களும் இல்லாமலில்லை. ஆனால் அவர்களுக்குத் தக்க சௌகரியங்களை அளித்தால் மட்டுமே அவர்களுடைய அறிவும் ஆற்றலும் பிரகாசிக்க முடியும். ராஜீய விஷயமாகப் பார்த்தாலும் அவர்களுக்குச் சம அந் தஸ்து கொடுக்கவேண்டியது அவசியமாகவே இருக்கின்றது. மதவிஷய மாகப் பார்த்தாலும் நரிக்கும், சிலந்திக்கும் மோட்சத்தைக்கொடுத்த கிருபா மூர்த்தி மானிட வடிவந்தாங்கிய அச்மூகத்தாரைக் கைவிட்டு விடமாட்டான். இறைவன் சன்னிதானத்தில் தாங்களே பிரம்மாவின் நெற்றியிலிருந்து தோன்றியவர்களென்று கூறிக்கொள்ளும் பிராமணர் முதல் மிகக் கேவலமாகக் கருதப்படும் பஞ்சமர் ஈறாக அனைவரும் சம அந்தஸ்தை உடையவர்களே. உலகத்தில் மக்களாய்ப் பிறந்த ஒவ் வொருவரும் எந்த ஜாதி, மத, தேசத்தைச் சேர்ந்தவர்களாயினும் அவரவர்களுடைய நடத்தைக்குத்தக்க பலாபலனே மறுமையில் கிடைக்கு மென்பது எல்லா மதங்களின் திரண்ட உள்ளக்கிடக்கை யாகும். உயரிய உண்மை இவ்வாறிருக்க மக்கள் தங்களுக்குள் உயர்வு தாழ்வும், பல வித்தியாசங்களும் கொண்டு ஒருவரோடொருவர் முரண் பட்டு வாழ்வதன் கருத்துதான் நமக்கு விளங்கவில்லை. தீண்டாமையை ஒழிப்பதென்பதனாலேயே ஆதி திராவிடர்களுடன் கலப்பு விவாகமும், சமபந்தி போஜனமும் உடனே வைத்துக்கொள்ள வேண்டு மென்று நாம் கூறுவதாக யாரும் கொள்ளலாகாது. அவர்களை அறியாமை என் னும் அந்தகாரத்தினின்றும் விடுவித்துப் பல துறைகளிலும் அவர்கள் முன்னேறும்படி செய்யவேண்டு மென்பதே எமது விருப்பம். கலப்பு விவாகமும், சமபந்தி போஜனமும் அவரவர்களுடைய இஷ்டத்தைப் பொறுத்தது. அவைகளால் பாவ புண்ணியங்களோ, ஒற்றுமையோ

அல்லது ஒற்றுமை யின்மையோ உண்டாகுமென்பதில் எமக்கு நம்பிக்கை இல்லை. ஒரே வீட்டில் பிறந்து வளர்பவர்கள் வேற்றுமைப் படுவதைக் காண்கின்றோம். ஆதலின் வேண்டப்படுவது உண்மையான அபிமானமும் சகோதரத்துவமுமேயாகும்.

மூன்றாவதாக, வழக்க ஒழுக்கங்களில் சில மாறுதல்கள் அவசியம் தேவை. மதச்சடங்குகளின் பெயரால் பல அநீதிகள் நம் நாட்டில் நடைபெறுகின்றன. மதாசாரங்களுக்கு அவசியமான சடங்குகளை மட்டும் செய்யவேண்டுமேயன்றி அநாவசியமாக இடைக்காலத்தில் புகுத்தப்பட்ட சடங்குகளைச் செய்யவேண்டிய அவசியமில்லை. மதச் சடங்குகளைச் செய்யும்போது அதன் அர்த்தத்தையும், நாட்டு நிலைமையையும் கவனித்தல் வேண்டும். பரிசுத்தமான ஒழுக்கங்களையே பின்பற்ற வேண்டும். தீய ஒழுக்கங்களுக்கு ஆதாரவாயிருக்கின்ற முறைகளை ஒழிக்கவேண்டும். வியபிசாரமே இன்னதென்று தெரியாத நம் நாட்டில் இப்பொது வியபிசாரம் தலைவிரித்தாடுகின்றது. அதை ஒழிக்காதவரையில் நம் நாடு ராஜீய விஷயத்திலோ ஆன்மார்த்த விஷயத்திலோ முன்னேற முடியாது. இவ்வாறே மதுபானத்தையும் ஒழிக்க வேண்டும். இவைகளை யெல்லாம் சமூக சீர்திருத்தக்காரர்களும் அரசியல் சீர்திருத்தக்காரர்களும் சேர்ந்தே செய்யவேண்டும். அரசியல் விடுதலை ஏற்பட்டுச் சுயராஜ்யம் ஸ்தாபிக்கப்பட்டால் இத்தகைய விஷயங்களி லெல்லாம் எளிதில் சீர்திருத்தம் பெறலாமென்பது உண்மையேயாயினும் இப்போது முதலே அந்த சீர்திருத்தங்களுக்காக அடிகோல வேண்டுவது அவசியமேயாகும்.

நான்காவதாக, பெண்களின் அந்தஸ்தும் நிலைமையும் உயர்த்தப் படல்வேண்டும். நம் நாட்டு மாதர்களின் நிலைமையை நினைக்கும் போதே எமது மனம் உருகுகின்றது; கண்ணீர் வடிகின்றது. பண்டைக் காலத்தில் மாதர்களும் ஆண்களுடன் சம உரிமை பெற்றிருந்தனர். ஒரு குடும்பத்திலோ, அல்லது சமூகத்திலோ ஒவ்வொரு ஆடவனுக்கும் கடமை இருப்பது போலவே ஒவ்வொரு பெண்மணிக்கும் கடமை இருக்கின்றது. அவரவர்களுடைய கடமையை அவரவர்கள் செய்வதில் உயர்வு, தாழ்வு ஏது? இக்காலத்து ஆண்கள் பலர் தம்மனைவியரைத் தாம் விலைக்கு வாங்கிக்கொண்ட அடிமைகளைப்போல் நினைத்து மிகக் கேவலமாக நடத்துகின்றனர். பல கொடியர்கள் மனைவியரை அடித் துத் துன்புறுத்துகின்றனர். அத்தகைய தம்பதிகளிடையே உண்மையான காதல் எவ்வாறு மிளிருமென்பதுதான் எமக்கு விளங்கவில்லை.

பெண்கள் படிக்கக்கூடாதெனக்கூறும் காட்டுமிராண்டிகள் பலர் இப்போதும் இருக்கிறார்களென்றால் பெண்கள் நிலைமை தாழ்வுற்றிருப்பதில் ஆச்சரியமென்ன இருக்கிறது? பண்டைக்கால மாதர்கள் பிரமசரிய விரதங் காத்து கற்கவேண்டியவைகளைக் கற்று, பிறகே தாம் விரும்பிய ஆடவர்களை விவாகம் செய்துகொண்டு, தாம் கற்ற கல்வியின் துணையினால் இல்லறத்தைச் செவ்வனே நடாத்தினர். அக்கால தம்பதிகள் வாழ்வு இயற்கைவாழ்வாகவும், இன்ப வாழ்வாகவும் விளங்கியதற்குக்காரணம் அவர்களின் கல்வியும், உண்மைக் காதலுமேயாகும். பெண்கள் படித்துவிட்டால் வியபிசாரம் செய்வார்கள் என்று கூறுவது பெண்கள் சமூகத்தையே இழிவுபடுத்துவதாகும். மேலும் அது தவறான அபிப்பிராயமுமாகும். இக்காலத்தில் பெண் கல்வியின் அவசியத்தைப்பற்றி நாம் அதிகம் எழுதவேண்டுவதில்லை. எப்படி மனிதனுடைய இரண்டு கண்களும் பார்வையுடன் இருந்தால்தான் நலம் பெற முடியுமோ அவ்வாறே பெண் சமூகமும் கல்வி கற்றால்தான் இந்திய சமூகம் பலதுறைகளிலும் முன்னேற்றமடைதல் கூடும். மானிடகோடிகளை விருத்திசெய்யும் தாய்மார்களாக அவர்கள் இருப்பதால் அவர்களும் கல்வி கற்றிருந்தால்தான் அவர்களுடைய மக்களும் கல்வியில் மேன்மையுறுதல் கூடும். பெண்களைப்பற்றிய வரையில் சீர் திருத்தம் செய்யப் புகுங்காலத்து பால்ய விவாகத்தை ஒழித்து விதவா விவாகத்தை அனுஷ்டிப்பது அவசியமாகும். பால்ய விவாகத்தால் பல கேடுகள் விளைவதைப் பிரத்தியட்சமாக அனுபவித்து விட்டோம். அதில் விவாகத்தின் அர்த்தமும் இல்லை. விதவாவிவாகம் செய்யவேண்டுமென்று கூறும்போதே வைதீக வகுப்பார் எம்மைத் தூற்ற ஆரம்பிப்பார்களென்பதை நாம் அறிவோம். ஆனால் பிறருடைய தூற்றுதலையோ, புகழுதலையோ நாம் எதிர் பாராமல் நமது கடமையையே செய்து வருகின்றபடியால் நாட்டின் நலத்தை உத்தேசித்து விதவா விவாகத்தை ஆதரிக்கவேண்டியது அவசியமாக இருக்கின்றது. பால்ய விதவைகளின் துயரமும் துன்பமும் சொல்லமுடியாது. இளம் மங்கையர்கள் மூடவழக்கத்துக்கு கட்டுப்பட்டு படும் அவஸ்தையை இறைவனே அறிதல் வேண்டும். எத்தனையோ அக்கிரமங்களும் அநீதிகளும் நடைபெறுகின்றன. அவைகள் ஒழியவேண்டுமாயின் விதவா விவாகத்தை ஆதரித்தல் வேண்டும். விவாகச்சட்டம் ஆண்களுக்கு வேறாகவும் பெண்களுக்கு வேறாகவும் இருப்பது தர்மமன்று. ஆண்கள் மட்டும் தள்ளாதவயதிலும் சிறுநங்கையரைக் கலியாணம் செய்துகொள்ள உரிமை இருக்கும்போது அதே உரிமையைப் பெண்களுக்கு அளிக்க

மறுப்பது எவ்வாறு தர்மமாகும்? மேலும் சிறுபிராயத்தில் விதவையாய்ப் போனவர்கள் தங்கள் ஆயுள் முழுதும் பிரமசரிய விரதத்துடன் இருப்பார்களென்று எண்ணுவது அறியாமையேயாகும். அவ்வாறு இருக்கும் உத்தமிகளுக்கு எமது பணிதலான வணக்கம். அவ்வாறு இருக்கப் பிரியமில்லாதவர்களுக்கும், முடியாதவர்களுக்கும் சமூகம் ஏதேனும் சௌகரியத்தைச் செய்துகொடுக்கவேண்டு மல்லவா? இன்றேல் அவர்கள் வழிதவறிச்செல்ல ஹேதுவாகின்றது. அப்போது அவர்களைக் குறைகூறுவதில் என்ன பயன்? இதையெல்லாம் உத்தேசித்தே இப்போது விதவாவிவாக சகாயசபை யொன்றை லாகூரில் நிறுவி இருக்கிறார்கள். அதன் கிளைஸ்தாபன மொன்றும் இச்சென்னையில் பிராட்வேயில் இருக்கின்றது. விதவாவிவாகத்தின் அவசியத்தை உணர்ந்த அன்பர்கள் அச்சங்கத்தாருக்கு உதவிசெய்யலாம்.

மற்றும் தினசரி வழக்க ஒழுக்கங்களிலும் சீர்திருத்தம் வேண்டும். நவீன நாகரிக வயப்பட்டவர்களின் நடை, உடை யாவும் நாட்டுக்கும் சமூக ஆசாரத்துக்கும் ஏற்றதாக இல்லை. "புலியைப் பார்த்துப் பூனை சூடு போட்டுக்கொண்டதே" போல் மேல் நாட்டினரைக்கண்டு நம் நாட்டவர் சூடு போட்டுக்கொள்வது அறியாமையேயாகும். ஆனால் மேல் நாட்டாரைப் பின்பற்றி நாம் அறிந்துகொள்ளவேண்டிய விஷயங்களும் பல உள என்பதை மறுக்க முடியாது. நமது பழைய ஆசாரங்களை மட்டுமே பின்பற்றுவோரும் வெறும் வெளிவேடத்தால் மட்டும் பயனில்லை என்பதையும் உள்ளும் புறமும் சுத்தமாக இருக்கவேண்டுமென்பதையும் உணரவேண்டும். வெளிவேடத்தைக்கண்டு ஒருவரிட அந்தரங்க ஒழுக்கத்தைப் பற்றி அவசரப்பட்டு ஒன்றும் கூறிவிட லாகாது. தெய்வ வழிபாட்டிலும் பல சீர்திருத்தங்கள் வேண்டும். சில்லரைத் தெய்வங்களுக்குப் பூஜை போடுவதும், ஆடு, மாடு, கோழி போன்ற ஜீவன்களைப் பலியிடுவதும் ஒழியவேண்டும். கோயிலில் நடைபெறும் பல அனாசாரங்களையும் அக்கிரமங்களையும் ஒழிக்கப் பாடுபட வேண்டியது இன்றியமையாததாகும்.

இவ்வாறெல்லாம் சமூக சீர்திருத்தம் செய்யும்போதே அரசியல் சீர்திருத்தம் விரைவாகப் பெறுவதிலும் தீவிரமாகப் பாடுபடவேண்டும். உலகத்தில் நமது பரதகண்டம் தவிர வேறு எந்த நாடும் பிறதேசத்தவரால் ஆளப்படுவதில்லை. பிறதேசத்தவர்கள் அத்தகைய அன்னிய ஆட்சியை ஒருநாளும் விரும்பமாட்டார்கள். அதுபோலவே நம் நாடும் வறுமை ஒழிந்து கைத்தொழில் அபிவிருத்தியடைந்து மக்கள் இம்மை

யிலும் மறுமையிலும் முன்னேற்றமடைய வேண்டுமாயின் தேசிய விடுதலை அவசியமாகும். ஆதலின் சமூக சீர்திருத்தக்காரர்களும், தேசிய வாதிகளும் ஒற்றுமையுடன் தீவிரமாக உழைத்து நம் தாய் நாடு எல்லாவகையிலும் சிறப்புடன் விளங்கும்படி செய்வார்களென்று நம்புவதுடன் அத்தகைய ஆற்றலை நம் நாட்டவர்க்குக் கொடுத்தருளும் படி எல்லாம்வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

:: ஏற்பது இகழ்ச்சி ::

ஏற்பது இகழ்ச்சி என்பது ஔவைப் பாட்டியாரால் அருளப் பட்ட அமுத மொழியாகும். அம்மாதரசியார் இச்சிறு வாக்கியத்தில் மகாபெரிய அர்த்தத்தைப் புகுத்திவிட்டார். பால்மணமாறாச் சிறு பிராயத்தில் இத்தகைய பல பெரியார்களின் அமுத மொழிகளை மனப்பாடம் செய்யும்போது அச்சிறுவர்கள் ஆசிரியரின் அடிக்குப் பயந்து ஏதோ மனப்பாடம் செய்து பாடம் ஒப்பித்து விடுகிறார்களே யன்றி அவற்றின் உட்கருத்துகளை அக்காலத்தில் உணர்வதில்லை; உண ரவும் போதிய ஆற்றல் இருப்பதில்லை. ஆனால் அதே வாக்கியங்களை, நன்றாகக் கற்றறிந்து இல்வாழ்க்கையை ஏற்று தக்க பருவமடைந்த பின்னர், யோசித்துப் பார்த்தால் அவற்றின் அருமையும் பெருமையும் நன்கு விளங்கும். அவை அவ்வாறு யோசிப்போருக்கு உற்றதுணையாக உதவி செய்கின்றன. அவ்வாக்கியங்கள் காலதேச வர்த்தமானங்க ளுக்கு ஏற்றவாறு பலப்பல அர்த்தங்களைக் கொடுக்கின்றன. "ஏற்பது இகழ்ச்சி" என்றால் பிச்சை எடுப்பது மிகக்கேவலம் என்பது பொருள். ஆம்; உண்மையே! பிச்சை யெடுக்கும் தொழிலைவிட மிகக் கேவலமா னது ஒன்றுமில்லைதான். மனிதவாழ்விற்கு அத்தியாவசியமான காற் றும் பிச்சைக்காரனிடம் நெருங்குவதில்லையென்றும், அவன் தன்னையும் பிச்சை கேட்டால் என்ன செய்வதென்று அது அஞ்சுவதாகவும் பெரி யார்கள் கூறுகின்றனர். ஆனால் "பாத்திரமறிந்து பிச்சை இடு" என் னும் பழமொழியும் இருந்து வருகிறது. இதன் கருத்தென்ன? இதில் தான் சூட்சுமம் இருக்கின்றது. தனவந்தர்களாய் இருப்பவர்கள் கண் டவர்களுக்கெல்லாம் பிச்சை கொடுத்து வந்தால் சோம்பேறிக் கூட்டம் நாட்டில் அதிகரித்துவிடுமல்லவா? ஆதலின் "தேகி" என்று வருகிற

அனைவருக்கும் பிச்சை கொடுக்காமல், எத்தகைய தொழிலையும் செய்ய முடியாத கூன், குருடு, நொண்டி, முடம், போன்ற அங்கஹீனர்களுக்கும், திக்கற்ற குழந்தைகளுக்கும் வயோதிகர்களுக்கும் மட்டும் தானம் செய்யவேண்டு மென்றும், அவர்களே அத்தானத்தைப் பெறுவதற் குரியவர்களென்றும் இதனால் விளங்குகின்றது. ஆனால் இப்படிப்பட்டவர்களுக்குத் தானம் செய்வதிலும் ஒழுங்கான அமைப்பும் நிர்வாகமும் இருத்தல் வேண்டும். சென்னை போன்ற பெரிய பட்டணங்களில் தான் இத்தகைய பிச்சைக்காரர்கள் அதிகமாதலின் அவர்கள் நடுத் தெருவிலும், கோயில் வாயில்களிலும், முக்கிய கடைத் தெருக்களிலும் கூட்டங் கூடிக்கொண்டு நிற்பதும், பிச்சை பெறுவதற்காக ஆரவாரம் செய்வதும் பார்ப்பதற்குக் கோரமாக இருக்கின்றது. மேல்நாடுகளில் பிச்சைக்காரர் விடுதிகளை ஏற்படுத்தி அவர்களை ஆதரிப்பதே போல் இங்குள்ள நகரசபையினரும் அன்னாரைத் திரட்டி ஒரு கட்டடத்தில் அடைத்து அவர்களுக்கு வேண்டிய சுக சௌகரியங்களை அளிப்பதே தக்க முறையாகும். அப்படிப்பட்ட நிலைமையிலுள்ளவர்கள் தவிர மற்றவர்கள் பிச்சைபெற அருகரல்லர் என்பது தெளிவாகிறது.

மற்றவர்கள் பிச்சை கேட்பது, அப்படிக் கேட்போரை மிகக் கேவலமான நிலைமையில் வைத்துவிடுகின்றது, "பல்லெல்லாந் தெரியக் காட்டிப் பருவரல் முகத்திற்கூட்டித் துணைக்கரம் விரித்து நீட்டிச் சொல்லெலாம் சொல்லி நாட்டி மல்லெல்லாம் அகலவோட்டி மான மென்பதனைவீட்டி இரத்தல் இழிவு இழிவு எந்தஞான்றும்" என்று குசேலோபாக்கியானத்தில் கூறியபடி ஒருவர் முன்சென்று எண் சாண் உடம்பை ஒரு சாணுக்கிக்கொண்டு பிச்சை கேட்பதைவிட மரண வேதனை வேறொன்றுமில்லை. ஆனால் பிச்சை கேட்பது இழிவு என்று சொல்லிக்கொண் டிருப்பதாலோ அல்லது திடதேகத்துடனும் நல்ல யௌவனத்துடனும் இருப்பவர் இரக்க வரும்போது, "தடியன் போல் இருக்கிறாயே, எங்கேயாவது கூலிவேலை செய்யக்கூடாதா?" என்று கேட்பதாலோ ஏதும் பயனில்லை. நாட்டு நிலைமையைக் கூர்ந்து கவனிக்கவேண்டும். நாட்டுக் கைத்தொழில்கள் அழிந்து விட்டன. பிதுரார்ஜித சொத்துக்களை யெல்லாம் அழித்துப் படித்துப் பட்டம் பெற்றும் உத்தியோகம் கிடைப்பதில்லை. மற்றும் பலகாரணங்களால் நாட்டில் வறுமையும் பஞ்சமும் தலைவிரித்தாடுகின்றது. இந்நிலையில் நாட்டு நிலையைச் செப்பஞ்செய்ய முயலாமல் ஏற்பது இகழ்ச்சி என்று, கூறுவதும் கூலிவேலை செய்யலாகாதா என்று சொல்வதும் செல்வர்க

ளின் அறியாமையையே காட்டுகின்றது. ஆனல் கூலிவேலை செய்ய சௌகரியமிருந்தும் சிலர் சோம்பேறிகளாக இருந்து காலங்கழிக்க விரும்பி இரக்க வருகின்றனர். அன்னரையும் திருத்தவேண்டுமே யன்றித் தூஷிப்பது கூடாது.

பிச்சை யெடுப்பதில் இப்போது பல கௌரவமான முறைகள் தோன்றி விட்டிருக்கின்றன. ஏழைத் தொழிலாளரின் கூலியில் மண் போட்டுப் பிழைக்கும் முதலாளிகளும், உழவர்களின் உழைப்புக்குத் தக்க ஊதியத்தைக் கொடுக்காமலிருக்கும் நிலச்சுவான்தார்களும், லஞ்சம் வாங்கும் உத்தியோகஸ்தர்களும், பாமரமக்களை ஏமாற்றிப்பணம் பறிக்கும் புரோகிதர்களும், ஏழை நாட்டாரை வருத்தி அதிக வரி வசூல் செய்யும் மன்னர்களும், தான்தோன்றித் தம்பிரான்களான மடாதிபதிகளும் கௌரவப் பிச்சைக்காரர்கள் என்பதே நமது அபிப்பிராயம். நாம் மூட பழக்க வழக்கங்களுக்கும், அநியாயச் சட்டங்களுக்கும் கட்டுப்பட்டு இந்தப் பிச்சைக்காரர்கள் நம்மை ஏமாற்றும்படி நாம் வைத்துக்கொள்ளக் கூடாது. நாம் ஒவ்வொருவரும் பகுத்தறிவைக்கொண்டு ஆராய்ச்சி செய்து பார்த்து அவசியமானவர்களுக்கு நியாயமானதையே கொடுக்கவேண்டும். இந்த ஏற்பது இகழ்ச்சி என்னும் உபதேசம் அந்த கௌரவப் பிச்சைக்காரர்களுக்கும் உண்டல்லவா?

இப்போது நாட்டில் வறுமை அதிகரித்துவிட்டபடியால் நாடு பொருளாதார நிலையில் உயர்வடைவதற்கான பிரயத்தனங்களைத் தேசபக்தர்கள் செய்யவேண்டும். நம் நாட்டுக் கைத்தொழில்களை உயிர்ப்பித்து அவற்றிற்கு ஆதரவு அளித்தல் வேண்டும். அன்னியநாட்டு சாமான்களைப் பகிஷ்கரித்தாலன்றி நம் நாட்டுத்தொழிலை அபிவிருத்தி செய்ய முடியாது. ஆதலின் நம் வாழ்க்கைக்கு அத்தியாவசியமானவற்றில் தற்கால நிலையில் எவற்றைச் செய்துகொள்ள முடியுமோ அவற்றைச் செய்துக்கொண்டு பிறவற்றை எந்த நாட்டிலிருந்து குறைவான விலைக்குக் கிடைக்குமோ அங்கிருந்து பெறவேண்டும். மாணவர்கள் கேவலம் உத்தியோகத்துக்கென்று படிக்காமல் தொழில் முறைகளைக் கற்றுக்கொள்ளவேண்டும். அப்போதுதான் நாட்டில் வறுமை குன்றி பிச்சைக்காரர்கள் அதிகப்படாமல் இருப்பார்கள்.

ஆனல் ஒவ்வொருவரும் தனக்குரிய உரிமையைப் பெறுவதில் இரக்கவேண்டிய அவசியமில்லை என்பதை ஔவையாரின் அமுத

மொழி ஞாபக மூட்டுகின்றது. மற்றெல்லா தேசங்களைப்போல் சுய ராஜ்யம் பெற இந்தியாவுக்கும் உரிமை இருக்கின்றது. அதைப்பெறுவதில் நாம் பிரிட்டிஷாரை பிச்சை கேட்கவேண்டிய அவசியமில்லை. நாமே சுயமாக நிர்ணயித்துக் கொள்ளலாம் என்பதே சிறந்த தேசிய வாதிகளின் அபிப்பிராயம். இதை யொட்டியே நேரு கமிட்டி அறிக்கையும் தயாரிக்கப்பட்டிருக்கிறது. ஆதலின் அவ்வறிக்கையை ஆதரிக்க வேண்டியது ஒவ்வொரு இந்தியர் கடமையுமாகும். எனவே ஏற்பது இகழ்ச்சி என்பதன் பொருளை காலதேச வர்த்தமானங்களுக்கு ஏற்ப உணர்ந்து நடந்துகொள்ளுதலே சாலச்சிறப்புடையதாகும்.

இக்காலத்தில் பலர் தாங்கள் தானங் கொடுப்பதாகச் சொல்லிக் கொண்டு கோயில் கட்டுவதற்கும், சத்திரம் அமைப்பதற்கும் சிறிது பொருள்கொடுத்துவிட்டுத் தங்கள் கடமை முடிந்துவிட்டதாகக் கருதுகின்றனர். அது தவறு. மக்களுக்கு எவ்வகையிலும் பிரயோசனப்படாத இம்முறைக்குப் பணம் கொடுப்பதால் பயனில்லை. அத்தகைய செல்வர்கள் கல்விச் சாலைகளை அமைப்பதற்கும், நாட்டுக் கைத்தொழிலை ஆதரிப்பதற்கும், பிச்சைக்கார விடுதிகள் கட்டுவதற்கும் முன் வருவார்களானுல் அவர்களுடைய உதவி நாட்டுமக்களுக்குப் பெரிதும் பயன்படும். ஏற்பது இகழ்ச்சி என்னும் முதுமொழி போலவே "பிச்சை புகினும் கற்கை நன்றே" என்னும் ஆன்றோர் வாக்கியமும் இருக்கின்றது. ஆதலின் ஏழை மாணவர்கள் சிறிதும் கூசாமல் தாங்கள் கல்வி கற்கும் விஷயத்தில் ஏற்பது இகழ்ச்சி என்று வாளா கிடக்காமல் தக்க செல்வர்களிடம் சென்று உதவியைப் பெற்று கல்வி கற்பதே சிலாக்கியமாகும். செல்வர்கள் தம் பணத்தைத் தாமே அனுபவிக்க வேண்டும் என்னும் தவறுன எண்ணத்தை விடுத்து தம்மை இறைவன் ஏழைமக்களின் பிரதிநிதியாக அனுப்பியிருக்கிறுன் என்பதை உணர்ந்து ஏழைமக்களுக்குக் காலத்துக்கேற்ற உதவி செய்வார்களாயின் நாடு பலதுறைகளிலும் முன்னேற்றமடைதல்கூடும். அத்தகைய சிந்தனையை இறைவன் நம் செல்வர்களுக்கு அளிப்பானுக.

அன்பர்காள்! உங்கள் வாழ்நாட்களில் வீண்வழிகளில் எவ்வளவு ரூபாய் செலவழித்திருப்பீர்களென்பதை நீங்களே ஆழ்ந்து யோசியுங்கள்? நல்வழியை போதிக்கும் விவேகபாநுவுக்கு ஒருவருடத்திற்கு ஏன் ஒரு ரூபாய் கொடுக்கக்கூடா தென்பதை சிந்தித்துப் பாருங்கள்?

இந்தியக் கல்வியின் தத்துவம்

[இது அறிஞர் வஸ்வானி அவர்களால் ஆங்கிலத்தில் சமீபத்தில் வெளியான "இந்தியன் ரெவியூ"வில் எழுதப்பட்ட வியாசத்தின் சாரம் சமாகும். அறிஞர் வஸ்வானியைப்பற்றி அறியாத இந்திய இளைஞர் இரார் என்றே நினைக்கிறோம். கல்வியில் கரைகண்ட அவரது வியாசத்தைத் தமிழ் மக்கள் அறியவேண்டு மென்னும் எண்ணத்துடனேயே அதன் மொழி பெயர்ப்பை இங்குத் தருகிறோம்] (ப-ர்)

இந்து தேச சரித்திரத்தை ஆண்ட சக்தியை மூன்று விதமாகப் பிரிக்கலாம். அவை ஆரிய, முஸ்லிம், நவீன சக்திகளாகும். ஆரிய சக்தி என்பது ஹிந்துமதம், புத்தமதம், சமணமதம் ஆகியவற்றின் திரண்ட கொள்கைகளாம். இஸ்லாம் மதம் நமக்கு விசித்திர சாகஸங்களைப் போதித்தது. நவீன சக்தியையும் குறைகூறலாகாது. அதனிட மிருந்தும் நாம் கற்றுக்கொண்ட விஷயங்கள் பல. நவீன சக்தி நம்மை நீண்ட உறக்கத்தினின்றும் தட்டி எழுப்பிற்று. ஆனல் தற்காலக் கல்வி முறை நவீன முறையில் சேர்ந்ததன்று. இந்தியாவிலுள்ள சர்வகலா சாலைகளுக்கும், மேல் நாட்டு நவீன சிந்தனை சக்திகளுக்கும் எத்தகைய சம்பந்தமும் காணேம். இந்தியக் கல்லூரிகளில் கற்கும் கல்விக்கும் இந்தியரின் வாழ்க்கைக்கும் எத்தகைய தொடர்புமில்லை. வெறும் பரீட்சையில் தேறுவதற்காக மனனம் பண்ணப்படும் பாடங்களாகவே தற்காலக் கல்விமுறை இருக்கின்றது. மாணவர்கள் கிளிப்பிள்ளைகளைப் போல் வெறும்சொற் பிரயோகங்களைக் கற்கிறார்களேயன்றி வாழ்க்கைக்கு இன்றியமையாத தான எப்பயிற்சியையும் பெறுவதில்லை. நமது மாணவர்கள் சொற்பிரயோகங்களைக் கற்பதற்காகச் செலவிடும் ஊக்கத்தை ஏதேனும் தக்க பயிற்சியைப் பெறுவதில் செலவிட்டிருப்பார்களாயின் நாம் பெரிய பிரக்யாதியைப் பெற்றிருப்போம் என்று ஒரு பெரியார் சொல்லி யிருக்கிறார். மேலும் நம் நாட்டு கல்வி கற்றவர்களென்போர் பொது ஜனங்களுடன் சம்பந்தம் வைத்துக்கொள்வதே கேவலமெனக் கருதி அவர்களுடன் எத்தகைய தொடர்பும் இல்லாமலிருக்கின்றனர்.

எனவே தற்காலக் கல்விமுறை ஒற்றுமைக்கு ஹேதுவாக இல்லாமல் நாட்டுமக்களிடையே பிரிவினையை உண்டுபண்ணக்கூடியதாக

இருக்கின்றது. வருஷா வருஷம் இன்புளுயன்ஸா என்னும் ஜூரத்தி னுல் 60-லட்சம் பேர்களும், மற்ற வியாதிகளால் 50-லட்சம்பேரும் இறக்கின்றனர். அவர்களைப்பற்றி யார் கவலைப்படுவது? எனவே நம் மாணவர்களுக்கு இரு விஷயங்கள் தேவை. அவை அறிவும், உணர்ச்சியு மேயாம். இந்தியாவைப்பற்றிய அறிவும், இந்தியாவுக்காக உணர்ச்சியும் அவசியம் மாணவர்களுக்கு இருத்தல் வேண்டும். உணர்ச்சி பெறுவ தென்பதனுல் தேசத்துக்காக உழைக்கவேண்டு மென்றும், அவசிய மானுல் தியாகம் செய்யவும் சித்தமாக இருக்கவேண்டு மென்றும் உண் மையான அவா தோன்றுதல் வேண்டும். எனவே இந்திய மக்களுக்கு பாரதநாட்டுக் கல்வி வேண்டும். இந்தியக் கல்வியின் முக்கியகொள்கை களைச் சிறிது விவரிப்போம். பண்டை நூல்களில் சத்சகவாசத்தைப் பற்றி அதிகம் வற்புறுத்தப்பட்டிருக்கின்றது. குருவுடன் சகவாசம் செய்வதும் ஒன்று. குரு என்றுல் மனிதனுக்கு மேற்பட்ட ஒரு அம் சத்திலிருப்பவர் என்பது கருத்தன்று. அவர் மாணவர்களின் அரிய சக்திகளை வெளிப்படுத்தும் மூத்த சகோதரனுக இருக்கிறுர். ஆசிரம மென்னும் குடும்பத்துக்கு குருவே பெரியவராவார். பண்டைக் கல்வி முறைக்கு கட்டடங்களும், தளவாட சாமான்களும் அவசியமென்று காணப்படவில்லை. குருவுக்கும் மாணவர்களுக்குமிடையே இருக்கும் சகோதர நேயமே அதிகம் வேண்டத்தக்கதாகக் காணப்பட்டது. ஒவ் வொரு மாணவரும் ஒவ்வொரு ஆத்மாவே என்னும் உண்மை கண்டு கொள்ளப்பட்டிருந்தது. கல்வி கற்பது உண்மையை அறிந்து ஆன்ம நிலையில் அபிவிருத்தி அடைவதற்காகவே என்று கருதப்பட்டது. தற் காலத்திலோ ஆன்ம அபிவிருத்தி கல்வி எந்தக் கல்லூரியிலும் போதிக் கப் படுவதில்லை. குருமார் ஒழுக்கத்தில் சிறந்தவர்களாக இருந்து மாணவர்கள் தேக மனவலிமையையும் ஆராயும் அறிவையும் பெற்று ஆனந்தத்தைப் பெறக்கூடிய சக்திகளையும் உபதேசித்து வந்தார்கள். அவர்கள் ஆனந்த நிலையை அடையுங்காலத்து உலக மக்கள் அனை வரும் இறைவனின் பிரணவ வடிவமே என்னும் உயரிய கருத்தை உணர்ந்துகொள்வதனுல் உண்மையான உலக சகோதரத்துவம் தோன் றுகின்றது. தற்காலக் கல்விமுறை அத்தகைய மனோ விகாரத்தைத் தான் உண்டாக்கக்கூடிய சக்தியுடையதாக இல்லை. மகாபெரிய குரு மார்களை அண்டினுலன்றி இந்திய மாணவர்களுக்கு அத்தகைய ஏக பாவ உணர்ச்சி தோன்றுவது அரிது. பண்டை ஆசிரமங்களில் குரு மார்கள் மாணவர்களுடன் தரையில் உட்கார்ந்துகொண்டு உபநிஷதம் முதலிய சாஸ்திர தர்மங்களை உபதேசித்து வந்தார்கள்.

தற்காலத்தில் ஆசிரியன்மாரையும் மாணவர்களையும் ஒன்ருகப் பிணைக்கச் சாதனமாக புஸ்தகங்கள் இருப்பதற்குப் பதிலாக அக்காலத்தில் மனமும் அறிவும் சாதனங்களா யிருந்தன. அத்தகைய பிணைப்பினுல் அவர்கள் அடக்கமெனும் செம்பொருளைக் கைக்கொண்டார்கள். இக்காலத்தில் எத்தனைபேர் அடக்கத்துடன் இருக்கின்றனர்? மேலும் அக்கால ஆசிரமத்தில் பிரமசரியமென்னும் ஒழுக்கம் ஓம்பப்பட்டு வந்தது தற்கால மாணவர்கள் அறிவு என்பதொன்றைப் பெறுகிருர்களே யன்றி அதை அனுபவிக்கும் ஆற்றலோ சமயமோ பெறுவதில்லை. தற்காலக் கல்விச்சாலைகள் சந்தடி மிக்க இடங்களில் கட்டப்பட்டிருக்கின்றன. ஆனுல் புராதன ஆசிரமங்களோ இயற்கை யழகுமிக்க இடங்களில் அமைக்கப்பட்டன. இயற்கை அன்னையின் நட்பு பெறுவதே அறிவு வளர்ச்சிக்குப்பெரிய சாதனமாகக் கொள்ளப்பட்டது; இயற்கை யழகைக்கண்டு களிப்புறுவதால் மனமும் தேகமும் வலிமையையும் பரிசுத்தத்தையும் பெறும். ஆசிரமவாசிகள் உழவும், பசுக்களை வளர்க்கவும் கற்றுக்கொண்டதுடன் பல கைத்தொழில்களையும் கற்றுக்கொண்டார்கள். உழைப்பும் அறிவும் ஒன்றோடொன்று சம்பந்தப்பட்டுக்கொண்டிருந்தது. அமெரிக்கர்கள் கைத்தொழிலில் மாணவர்களைப் பழக்கவேண்டிய அவசியத்தை உணர்ந்தார்கள். பெண்கள் தொப்பிகளையும், சரிகை வேலைகளையும் செய்கின்றனர். ஆண்கள் தளவாட சாமான்களைச் செய்வதுடன் உழவுத் தொழிலும் செய்கின்றனர். பள்ளிக்கூடங்களில் செய்யப்படும் தொழில்களாலேயே அமெரிக்கர்கள் லட்சக்கணக்கான ரூபாய்களைப் பெறுகின்றனர். இந்தியக் கல்வியினுல் இந்தியா நன்மை பெறவேண்டுமாயின், இந்தியாவின் வறுமை ஒழிய வேண்டுமாயின் இந்தியப் பள்ளிக்கூடங்களில் குடிசைத்தொழில்களை கற்பிக்கவேண்டியது மிக அவசியமாகும். அப்போதுதான் தேக சம்பந்தமான உழைப்புக்கும் மரியாதையும் ஏற்படும்.

இரண்டாவதாக, பண்டைக் கல்வியால் தர்மத்தில் புத்தி நிலைத்திருந்தது. சட்டம், சமூகம், தேசம் இவற்றிற்குக் கட்டுப்பட்டு மரியாதையுடன் அவற்றின் நன்மைக்காகவே பாடுபட்டு வந்தார்கள். மூன்ருவதாக, காமம் என்னும் தன்னைத்தானறிதலுக்கும் அக்கல்வி துணை நின்றது. மேலும் கல்வியானது நம்மை தேசிய ஊழியத்துக்கும் தயாராக்கிவிடவேண்டும் நான்காவதாக மோட்சம் பெறுவதற்கும் கல்வி சாதனமாக இருத்தல் வேண்டும். மோட்சம் என்ருல் பாசபந்தங்களினின்றும் விடுதலை யடைதல் என்பதுதான் பொருளாகும். எனவே

குறுகிய நோக்கம் கூடாது. ஹிந்து தர்மப்படி ஒரு சமூக மென்றால் பிறதேசத்தாரைக் கொள்ளையடிப்பதோ அல்லது ஆட்சி புரிவதோ செய்யக்கூடிய கூட்டமென்று அர்த்தமல்ல. தர்மத்தைச் செய்யும் வாழ்க்கையை யுடைய ஒரு சமூகமென்றே பொருள்படும். ஒரு சமூக மென்பது பொதுவான மானிட சமூகத்தின் ஒரு அம்சமேயாகும். ஆனால் தற்காலத்தில் சமூகமென்பது மானிட கோடிகளைப் பிரிக்கும் ஒரு கொள்கையாக இருக்கின்றது. பண்டை ஆசிரமங்களில் எல்லாரும் ஒரே ஆத்மா என்னும் தாராள நோக்கத்தைப் போதித்தனர். அத்த கைய போதனையின்றி பாசபந்தவிடுதலே பெறுவதுமிக அரிது. எனவே இந்தியதேசியக் கல்வியானது இந்தியாவின் பண்டைச்சிறப்பையும் உய ரிய கொள்கைகளையும் ஞாபக மூட்டக்கூடியதாக இருத்தல் வேண்டும். ஜர்மானியில் பல பொதுபாடசாலைகள் இருக்கின்றன. அங்கே உபாய சம்பளம் பெற்று இலக்கியம், விஞ்ஞானம் முதலிய சாஸ்திரங்களைப் பாமர மக்களுக்கும் போதிக்கின்றனர்.

அதாவது, கல்வி பெறுவதில் எல்லாவகை மக்களுக்கும் ஒரேவித மான சௌகரியத்தை ஏற்படுத்திக் கொடுக்கிறார்கள். இந்தியாவின் பண்டைக் கல்வி முறையைப்பற்றி எழுதும் ஜர்மன் ஆசிரியர், இந்தியா வில் கல்வி உபதேசம் குழந்தை பிறப்பதற்கு முன்னரே ஆரம்பிக்கப் படுகிறதென்றும், ஆதலின் கர்ப்பிணிகளான தாய்மார்களுக்கும் கல்வி கொடுக்கும்படியான ஒரு முறையை ஏற்படுத்துவதே தற்காலத்துக் குப் பொருந்தும் என்றும் கூறுகிறார்.

இக்காலத்தில் நமது கல்விமுறை கேவலமான நிலைமையில் இருக் கிறதென்றால் அதற்குக் காரணம் நம் நாட்டுக் கல்வி முறை ஒழிந்ததே யாகும். மாணவர்கள் ஏதோ ஒருவிதமான கல்வியைக் கற்றிருக்கிறார் களேயன்றி மானம் இடிந்து தலைமேல் விழுந்தாலும் தாங்கற்ற உண்மை யைக் கடைப் பிடித்து நிற்பவர் எத்தனைபேர் இருப்பர்? பிறரை வெறுக்காமல் தேசப்பணிசெய்ய முன்வருவோர் எத்தனைபேர் இருக் கின்றனர்? இந்திய இளைஞர்கள் ஆசிரமக் கல்வியின் கொள்கைகளைக் கடைப்பிடிக்கும்வரையில் இந்தியமனம் உரமானதாக இருக்கும். இந் தியா புராதன கல்வி முறையை பின்பற்றி கல்வி புகட்டுமாயின் இந்திய மக்கள் உலகத்தாருக்கு நற்போதனை செய்யக்கூடிய சக்தி பெறுவார் கள். அப்போது ஐரோப்பிய சர்வகலாசாலைகளும் இந்தியாவுக்குரிய மரியாதையைச் செலுத்தும்.

திருமுருகாற்றுப் படை

பெரம்பூர், கலவல-கண்ணன் செட்டியார் உயர்தர பாடசாலை
தமிழ் ஆசிரியர், ஸ்ரீமான்
பா. பக்கிரிசாமி செட்டியாரவர்கள் எழுதுவது

ஒரு சிறு ஆராய்ச்சி

பத்துப் பாட்டைச் சேர்ந்த பெரும்பாலான நூல்கள் எல்லாம் ஆற்றுப்படை என்ற முறையில் ஆக்கப்பட்டிருக்கின்றன. ஆற்றுப் படை யென்பது உதவியைத்தேடும் ஓர் பிரயாணியைக் கொடையில் சிறந்தவனும், பிறர் துயரை நீக்கப் பிரியமுள்ளவனுமான ஒரு மன்ன னிடம் அழைத்துப்போகும் ஒருவர் நடுவில் காணும் நகரச்சிறப்பு முத லியவற்றை புகழ்ச்சியாகப்பேசி, அந்நாட்டை ஆளும் அரசனுடைய ஆற்றலனைத்தையும் எடுத்துரைக்கும் வகையில் எழுதப்படுவதாகும். பொதுவாக ஆற்றுப்படையானது வள்ளன்மை வாய்ந்த அரசனிட மிருந்து பரிசுகள் பல பெற்றுவந்த ஒரு கவி அத்தகைய மன்னனைத் தேடும் மற்றொரு புலவருக்கு அவ்வேந்தனது அரிய தரும குணத்தை எடுத்துக் கூறுவதுபோல இயற்றப்படுவது. முக்கியமாய்ப் பத்துப்பாட் டிலுள்ள ஆற்றுப்படை நூல்கள் அனைத்தும் மேற்கண்ட விவரத் தையே கொண்டு எழுதப்பட்டிருக்கின்றன. ஆனல் போர்க்கடவுளான முருகனைப்பற்றி புகழ்ந்து பேசும் திருமுருகாற்றுப்படை எனும் பத் துப்பாட்டின் முதன் நூல் அவ்வாறு அருளப்படவில்லை.

நூலின் வரலாறு

திருமுருகாற்றுப்படை ஆண்டவன் முருகபிரானுடைய அருங் குணங்களையும், வீரபராக்கிரமங்களையும் அருள் விசேடங்களையும் அவ ரிருத்தற்குரிய திருத்தலங்களையும் எடுத்துரைக்கின்றது. சாதாரண மாக ஜனங்களுக்கு, தமிழர்களுக்கு அதிகமாகத் தெரிந்திருக்கும் அரிய நூலும் ஆதிபாராயண நூலாக அமையப்பெற்றிருப்பதும் திரு முருகாற்றுப் படையே. இச்சிறந்த பனுவலைச் செய்தவர் மதுரை

கணக்காயனர் மகனர் நக்கீரனர். நக்கீரர் சோமசுந்தரக்கடவுள் அறு பத்துநான்கு திருவிளையாடல் செய்த திருக்கூடல் என்னும் மதுரை யம்பதியில் கடைச்சங்கம் இருந்த காலத்து; அச்சங்கத் தலைவராய் புல வர்களுக்குத் தலைமையுற்று புகழ்பெற்று இருந்தவர். ஆலவாய் அவிர் சடைக்கடவுள் தம்மடியவர் தருமிக்காக அருளிய "கொங்குதேர் வாழ்க்கை" என்ற அரிய பாசுரத்திற்குக் குற்றங் கூறிய பெரியவர்.

இப்புலவர்பெருந்தகை திருமுறுகாற்றுப்படையை திருவாய் மலர்ந்ததற்குக் காரணமாய் பூதமொன்று ஆயிரம்பேர்களை அருந்த வேண்டுமென்னும் ஆசையுடையதாய் 999-பேர்களை சேர்த்து ஒரு வருக்காக காத்திருந்த சமயத்தில், ஆங்கு நக்கீரர் தற்செயலாய் வரக் கண்ட பூதம் அவரையும் பிடித்து சிறையிலிட்டு, தன் நித்திய கடன் களை முடித்து வந்து ஆவலையகற்றிக் கொள்ளலாமென்று வெளியே சென்றதாகவும் அதுசமயம் பேராபத்தி லகப்பட்ட நக்கீரர் இந்நூலைப் பாடி முருகபெருமானை வேண்ட, அங்நொடியே வடிவேல் தரித்த வர தன் ஆங்கு தோன்றி அக்கொடிய பூதத்தைக்கொன்று நக்கீரருள் ளிட்ட ஆயிரவரையும் விடுவித்ததாகவும் ஓர் விநோதக் கதை வழங்கு கின்றது. நக்கீரர் தமக்கு மகத்தான ஆபத்து நிகழ்ந்த பொழுது இத னைப்பாடி அவ்வாபத்திலிருந்து விடுபட்டாராதலால் "திருமுருகாற் றுப்படை" என்னும் தெய்வப் பனுவலை அனுதினமும் அன்போடு பாராயணம் பண்ணுவோர்க்கு ஆண்டவன் ஆறுமுகன் அருள்புரிவா னென்பது ஆன்றோர் துணிபு. இதனை:—

"நக்கீரர் தாமுரைத்த நன்முருகாற்றுப் படையை
தக்கோலம் நாள்தோறும் சாற்றினல்—முக்கோல
மாமுருகன்வந்து மனக்கவலை தீர்த்தருளி
தானினைத்த வெல்லாம் தரும்."

என்ற திருவாக்கான் உணர்க.

திருப்பரங்குன்றம்

ஆசிரியர் நக்கீரனர் திருமுருகாற்றுப் படையின ஆரம்பத்தில் மக்களை நோக்கி "நீங்கள் இவ்வுலக இன்பங்களை வெறுத்து, எக்காலும் ஆண்டவன் திருவடியிலே கலந்து இருக்கவிரும்பினல் சிறந்த வேலா யுதத்தை யுடையவரும் என்றும் இளமைப் பருவமுடையவருமான ஸ்ரீ முருகக் கடவுளை வழிபட்டே யாகவேண்டும். அவர் திருவுள

மகிழ்ந்து எழுந்தருளியுள்ள திருத்தலங்கள் இவை" யென எடுத்துரைக்கின்றார்.

முதன்முதலாக திருப்பரங்குன்றத்தைப் பற்றிக் கூறுகின்றார். இக்குன்று தற்கால மதுரைக்கு தென்மேற்கிலிருக்கிறது. ஆனால் திருமுருகாற்றுப்படையில் திருப்பரங்குன்றம் மதுரைக்கு மேற்கில் இருப்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. முதலில் மதுரையைப்பற்றி கூறப்புகுந்த ஆசிரியர் அதன் பண்டைய சிறப்பை "போருக்கு வருகின்றவரை வரலாம் என்று கூவி யழைக்கும் குறிப்பை காட்டா நிற்கும் கொடிகளின் பக்கத்தில் கட்டிய பந்தும் பாவையும் தொங்கிக்கொண்டிருந்தலால் போர் செய்வார் இல்லையென்று விளங்கும் கோயில்வாயில்களையும் இலக்குமி வீற்றிருந்த குற்றம்தீர்ந்த கடைவீதிகளையும் மாடமாளிகைகளும் கூடகோபுரங்களுமுள்ள தெருக்களையுமுடைய மதுரை மாநகர்" என நமக்கு அறிவிக்கிறார்.

திருச்சீரலைவாய்

இரண்டாவதாகக் கூறியுள்ள க்ஷேத்திரம் திருச்சீரலைவாய். இப்பொழுது திருச்செந்தூர் யென வழங்குவது. இது திருநெல்வேலிக்கு 37-மைல் தூரத்திலுள்ள கடற்கரை க்ஷேத்திரம். இங்கு முருகப்பெருமான் ஆறுமுகங்களும், பன்னிரண்டு கைகளுமுடையவராய் திவ்ய சொரூபத்தோடு எழுந்தருளி யிருப்பதை ஆசிரியர்கூறி அவற்றின் தனித்தனி தொழில்களைப் பற்றியும் அதிக அழகாக தெரிவிக்கின்றார்.

திரு ஆவினன்குடி

மூன்றாவதென சொல்லப்பட்டது திரு ஆவினன்குடி (திரு-இலக்குமி) (ஆ-காமதேனு) (இனன்-சூரியன்) (கு-பூமி) (டி-இந்திரன்) இவர்கள் பூசித்த "பழநி யடிவாரம்" என்ற திருத்தலம். பழநிமலை என அழைக்கப்படுவது இதுதான் திண்டுக்கல்லுக்கப்பால் மேற்கில் 36-மைலில் இருக்கின்றது. இங்கு நான்முகனை முன்போல் சிருஷ்டித் தொழிலில் நிலை நிறுத்த நினைத்து தேவர்களனைவரும் ஒருங்குவந்து தெய்வயானை யம்மையோடு வீற்றிருக்கும் முருகப்பெருமானைக் கண்டதாக கூறப்பட்டிருக்கிறது.

திருவேரகம்

அடுத்தஸ்தலம் திருவேரகம். இது பெயர்பெற்ற பக்தர்களிருந்த இடமெனத் தெரிகிறது. இப்பாகத்தில் ஆசிரியர், அந்தணர்க்குரிய

கற்றல், கேட்டல், வேட்டல், வேட்பித்தல், ஈதல், ஏற்றல், என்ற ஆறு கடன்களையும் விளக்கி, அவர்கள் செய்யவேண்டிய நித்யானுஷ்டானங்களைப் பற்றியும் விவரிக்கின்றார். திருவேரகம் என்று சொல்லப்படுவது மலைநாட்டிலுள்ள ஓர் கிராமம் என சில வியாக்யானிகள் அபிப்பிராயப்படுகின்றனர். ஆனால் சாதாரணமாய் கும்பகோணத்திற்கடுத்த சுவாமிமலையென வழங்கும் க்ஷேத்திரமே திருவேரகம் என எண்ணப்படுகிறது.

குன்றுதோருடல்

ஐந்தாவது குன்றுதோருடல் என்பது. குன்றுதோருடல் என்பது நிலவரமான ஒரு இடத்தைக் குறிப்பதல்ல. இது தணிகை, விராலிமலை, வள்ளிமலை, கழுகுமலை. குன்றக்குடி, முதலிய சிறு குன்றுகளை குறிக்கின்றது.

இதில் ஆசிரியர் குறிஞ்சி நிலமக்களின் நடை, யுடை, பாவனைகள் முதலியவற்றைக் கூறியிருக்கிறார்.

பழமுதிர்சோலை

பழமுதிர்சோலை என்னும் ஸ்தலம்தான் திருமுருகாற்றுப்படையில் கடைசியாக எடுத்தாளப்பட்டிருப்பது. இந்தஸ்தலம் மதுரைக்கு வடகிழக்கில் 12-வது மைலில் இருக்கிறது. இப்பொழுது கள்ளர் அழகர் கோயில் என்று விளங்குகின்றது. இப்பாகத்தில் ஆசிரியர் இக்காலத்திலும் மறையாத சில பழக்க வழக்கங்களை, அழகாகச் சொல்லியிருக்கிறார். அடியாரது அன்பிற்கும் மனப்பாங்குக்கும் தகுந்த வண்ணம் அவரவரது தெய்வத்தன்மையோடு முருகர் பிரசன்ன மாவார் என்றும், அவ்வாறு முருகன் தோன்றுமிடங்கள். நாற்சந்தி, முச்சந்தி, பெரியமரத்தடி, சபைகூடும் அம்பலம், ஆத்தீண்டு குற்றியையுடைய இடம், முதலியன வென்றும் கூறுகின்றார். பண்டையில் மக்கள் குமரக்கடவுளை வழிபட்ட விதமும், அவர்களளித்த நைவேதனம் முதலிய விவரமும் அவர்களது பிரார்த்தனை வரலாறும் இதனால் தெளிவாகத் தெரிந்து கொள்ளலாம்.

அன்பர்களே! உங்களிருப்பிடம் நாடி அன்புடன் தேடி, நுங்கள் கரத்தமர்ந்து விளங்கும் "விவேகபாநு"வின் வருடச்சந்தா ரூபாய் ஒன்றும் அனுப்ப ஏன் தாமதப்படுத்துகிறீர்கள்? இனியேனும் பாநுவின் சந்தாவை அனுப்பி வைக்க கேட்டுக் கொள்ளுகிறோம்.

பத்திராதிபர்,

உலகத்திற்கு உழைப்பதே கடவுளுக்கு உழைப்பதாகும்

சென்னை பரங்கிமலைக்கு அடுத்த ஆதம் பாக்கத்தில் இருந்துவரும் பொதுஜன ஊழிய சங்கத்தாரின் சுயநலமற்ற தொண்டைப்பற்றிப் பத்திரிகைகளைப் படிப்போர் அறிந்திருக்கலாம். அச்சங்கத்தார் "மன்னுயிருக்குச்செய்யும் தொண்டே கடவுளுக்கு செய்யும் தொண்டு" என்ற விஷயமாய் ஒரு வியாசப்போட்டி நடத்தினர்கள். அதில் வெற்றி பெற்ற இருவரில் ஒருவர், சென்னை ராஜதானிக் கல்லூரியில் ஜூனியர் பி. ஏ., வகுப்பில் வாசிக்கும் ஸ்ரீமதி ஈ. த. **பத்மாவதி அம்மாள்** என்னும் பெண்மணியாவர். அவ்வம்மையார் எழுதிய கட்டுரையை நம் பத்திரிகை அன்பர்களின் நன்மையைக் கருதி கீழே பிரசுரிக்கின்றோம். (ப-ர்)

புனைந்துரை

தானலா துலகமில்லைச் சகமிலா தடிமையில்லைக்
கானலா தாடலில்லைக் கருதுவார் தங்களுக்கு
வானலா தருளுமில்லை வார்குழன் மங்கையோடு
மானலா தூர்வதில்லை யையனை யாறனார்க்கே.

சகமலா தடிமையில்லைத் தானலாற் றுணையுமில்லை
நகமெலாந் தேயக்கையா னுண்மலர் தொழுதுதூவி
முகமெலாங் கண்ணீர்மல்க முன்பணிந் தேத்துந்தொண்ட
ரகமலாற் கோயிலில்லை யையனை யாறனார்க்கே.

—அப்பர்—

"கண்டவிடமெல்லாம் கடவுள்மயம்" என்று தாயுமானவரும்; "உரைசேரும் எண்பத்து நான்கு நூறாயிரமாம் யோனிபேதம் நிரை சேரப் படைத்து அவற்றின் உயிர்க்குயிராய் அங்கங்கே கடவுள் நிற்கின்றார்" என்றுசம்பந்தரும்கூறியுள்ளமொழிகளை நாம்கேட்டிருக்கின்றோம். இங்ஙனம் உலகத்தில் கடவுள் எங்கும் நிறைந்து ஒவ்வொரு உயிரின் கண்ணும் விளங்குவது நமது ஊனக்கண்ணுக்குத் தோற்றாததே. ஆயினும் மனிதராய்ப் பிறந்ததற்கு நாம் செய்யவேண்டிய கடமைகள் பல உள என்பதும், அத்தகைய கடமைகள் அல்லது அறங்கள் சுருதியால் காணக்கூடியவை மாத்திரமல்ல வென்பதும் யுக்தி அநுபவத்திற்கும்

பொருந்துவனவாய் இருக்கின்றன பல வென்பதையும் நமது பகுத்தறிவால் கண்டறிகின்றோம் அல்லவா.

நமது கடமைகள் இல்லறத்தில் ஒழுகவேண்டியன இவ்விவையென்றும் திருக்குறள் முதலிய நீதி நூல்களால் நன்கு விளங்கும். ஆயினும் அத்தகைய நூல்கள் பண்டிதர்களுக் கன்றிப் பாமர ஜனங்களுக்கு எடுத்துக் காட்டக்கூடியவையாய் இராததால், பாமர ஜனங்களுக்கு ஏற்குமாறு அடிவரும் விஷயங்கள் என் சிற்றறிவுக்கு ஏற்றவாறு காட்டத் துணிகின்றேன்.

உலகத்திற்கு உழைப்பு என்னும் தொடர்மொழி, உலகத்திலுள்ள சகல ஜீவர்களுக்கும் உபகாரப்படும் தொழில் என்னும் பொருளாம். உலகம் என்பது உயர்ந்தோர்மாட்டே என்னும் மரபுபற்றி உலகமென்னும் மொழியை யான் உபயோகிக்கவில்லை. உழைப்பு என்பது தத்துவ ஆராய்ச்சியின்கண்ணே பயன் கொடுக்கத்தகுந்த தென்றும், பயனையே அளவையாகக்கொண்டு அளக்கத்தக்க தென்றும் ஆன்றோர் கூறுவர். யான்கூறும் உழைப்போ, பெரும்பாலும் பயனற்றவையாயுமிருக்கும். ஆயினும் கடவுள் சந்நிதானத்தில் அத்தகைய உழைப்புப் பயனிற் செய்கையென்னும் பட்டம் பெறாது. ஆகவே நன்றெனை. எம்பெருமான் ஆமோதிக்கத் தக்கதும் நன்குணர்ந்தோரால் பழிக்கப்படாததுமானதே. இதன் பிரிவுகள் யாவை? காலங்கள் யாவை? இடங்கள் யாவை? தேசங்கள் யாவை என்னும் வர்த்தமானங்களை இவ்வியாசம் தொகுத்துச்சுட்டி வகுத்துக்காட்டும்.

உலகத்திற்கு உழைப்பான் ஏன்?

நாம் உலகத்திற்கு ஏன் உழைக்கவேண்டும் என்னும் முதல் வினாவிற்கு விடை பகருவோமாக. சூளாமணியில் "மன்னுயிர் வருத்தங் கண்டும் வாழ்வதே வலிக்குமாயின் அன்னவன் பெற்ற ஆண்மை அலி பெற்ற அழகுபோலாம்" எனக் காண்கின்றோம் ஆகவே புருஷார்த்தத்தில் முதலாகக் கூறப்படும் அறத்தில் முக்கியமாய்க் கவனிக்கவேண்டிய தர்மம் பரோபகாரம் என்றும் அவ்வாறு பரோபகாரம் செய்யாதவன் அலி யென்றும் மேலோர் மொழிவர். இதன்றியும் "அன்பும் சிவமும் இரண்டென்பது அறிவிலர்" என்று திருமூலர் வாக்கினால் கடவுள் சன்னிதானம் நமது இருதயத்தின்கண் விளங்குவது நிச்சயமாயின் நாம் கருணாநிதியை இருதயத்தில் வைத்துக்கொண்டு கருணைமொழி சிறிதில்லாமலும் ஈகைத்தன்மை யில்லாமலும் உயிர் வாழ்வது எங்ஙனம்?

கடவுளின் சொரூபமானது ஒவ்வொரு ஜீவராசியின் இருதயத்தில் விளங்குவதால் அவ்வச்சீவன் குணத்திற்குத் தக்கவாறு கருணையும் அதனால் பிறஜீவன்களுக்கு உழைப்பும் செய்ய நேரிடுகின்றது. உயிருள்ள அஃறிணைப்பொருள்களில் சிலவற்றை ஆராய்ச்சி செய்வோமாயின் புலி, கரடி, நரி முதலிய துஷ்ட ஜந்துக்களும், தத்தம் குட்டிகளிடம் அன்பு செலுத்துவதைக் காண்கின்றோம்.

(இது மிகவும் தாழ்ந்த அந்தஸ்து) இதற்கு உயர்ந்தபடி நாய் அது தன் எஜமானனுக்குத் தன் பிராணனைகொடுக்கின்றது. இங்ஙனம் பரோபகாரகுணமானது * பகுத்தறிவு பெறாத விலங்குகளுக்கும் சிறு பொறி உண்டெனில் மனிதர்களுக்குப் பரோபகாரமான, உழைப்பு எத்துணைப்பங்கு அதிகமாய் விளங்கவேண்டுமென்பது யாம் யோசிக்க வேண்டியது அவசியம் அல்லவா?

மனிதர்களுக்கும் மற்றைய ஜந்துக்களுக்கும் ஜனன வித்தியாசம் பிறர்க்குப் பயன்பட உழைக்க எண்ணுவதே, இதுவே மற்றைய நற்குணங்களுக்கு மூலாதாரமாக விளங்குவது. மனிதன் சுயநலத்தையே கருதி நடப்பானாயின் விலங்கின்பால் படுவன். சுயநலம் கருதாது பரோபகாரத்தையே கருதுவது கடவுள் தன்மையாம். இத்தன்மை மிக, மிக,

---

* சொல்லியங்குயா வண்டிமிர் தேக்கடி
வல்லியங்குழ வாட்கண் படுப்புவ
வல்லியங் குழலார் வெறியாடிய
பல்லியங் குழலார்ப் பணித்தஞ்சுமால்.

—காஞ்சிப்புராணம்—

தாயுமானவர் தன் குருவைப்பற்றிக் கூறுவதைக் காண்க.

கானகமிலங்கு புலி பசுவொடு குலாவுகின் கண்காண, மதயானை நீகை காட்டா வும்கையால் நெகிடிக்கெனப் பெரிய கட்டைமிக ஏத்திவருமே, போனக மமைந்தென, அக்காமதேனு நின் பொன்னடியினின்று சொலுமே புலிராஜர், கவிராஜர், தவராஜரென்றுனை போற்றி ஜெய போற்றி யென்பர். ஞானக்குஞ்சர முகங்கண்டபோதிலே, நவநாதசித்தர்களும் உன் நட்பினை விரும்புவார். சுகர் வாமதேவர் முதல் ஞானிகளுமுனை மெச்சுவார், வானகமும் மண்ணகமும் வந்தெதிர் வணங்கு நின்மகிமையது சொல்ல எளிதோ. மந்த்ரகுருவே யோக தந்த்ரகுருவே மூலன்மரபினின்வரு மோனகுருவே.

மனிதன் தேவனுவான். அத்தகைய செந்தண்மை பூண்டொழுகின் பூசரன் எனவும் பட்டம் பெறுவன். இதுவே சத்துவகுணத்தின் உச்சியாகும். இக்குணமென்னும் குன்றேறி நின்றோர்க்கு, எக்காரியம் சித்திக்காது?

உலகத்தில் இல்லத்தார்க்குழைத்தல், சுற்றத்தார்க்கு உழைத்தல்

குழவிப்பருவம், இளம்பருவம், முதிர்ப்பருவம் என மனிதர்வாழ் நாளைப் பிரிக்கக் கூடுவதுபோல் ஆங்காங்கு கடமைகள் ஏற்படுவதும், கழிவதுமாயிருக்கும் மனிதன் பால் உண்ணும் காலத்தில் யாதொரு கடமையும் படாதிருக்கின்றனன். அவனுக்கே யாவரும் கடமைப்படுகிறார்கள். தாய்க்குப் பால் கொடுக்கும் கடமை; தந்தைக்கு இடம், பொருள், ஏவல் தக்கவாறு அமைக்கும் கடமை; சுற்றத்தார்க்குச் சகுனம் முதலிய சடங்குகள் நடாத்தி அன்பு பாராட்டுதல் கடமை. இத்தகைய கடமைகளைப் பட்டவராய் பலர் சிலகாலம் வரையில் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக இவனை வளர்க்கின்றனர். நாள் வளர வளரப் பிறர் தனக்குச் செய்யவேண்டிய கடமைகள் குன்றவும், தான் பிறர்க்குச் செய்யவேண்டிய கடமைகள் ஒவ்வொன்றாய்த் தோன்றி வளரவும் நேரிடுகின்றது. பால் மறப்பதற்கு முன்னரே, நல்லவை இவை, தீயவை இவை இவை என்னுஞ் சிறு நீதிகள் அறிகின்றனன். நல்லது என்பது பிறர்க்குப் பயன்படுவது, பிறர்க்கு இன்பம் கொடுப்பது என்றும் கொடியது என்பது பிறர்க்குப் பயனுகாதது, பிறர்க்குத் துன்பம் கொடுப்பது என்றும் உணர்கின்றான் ஆகையால் தாயினிடம் எவ்விதக் கடமைகள் தான் பட்டிருக்கின்றானென்பது கொஞ்சம் கொஞ்சமாய் ஊகித்தறிகின்றான்.

இதற்குப் பின்னர் தாயும் தானுமாய் தந்தைக்குக் கடமைப்பட்டிருக்கின்றது கொஞ்சங் கொஞ்சமா யூகித்தறிகின்றான். பிறகே, தாயினும் சிறந்தபொருள் தந்தையென்று தெரியும், வயது வந்ததும் பள்ளிக்கூடத்திற்குப் போய்க் கல்வியும் ஞானமும் ஏற! ஏற! குரு, தாய், தந்தை விசேஷமென்றும், சகல பொருளுக்கும் காரணமாயிருக்கும் பரம்பொருளை அறியச்செய்து கடவுளிடம் பக்தி விளைவிப்பதற்குக்

ஆண்பாலைக் குறித்தது பெண்பாலைக் குறிக்கும், ஒரு மொழி ஒழிதன் இனங்கொளக் குறித்தே.

காரணமாயிருந்தவன் குருவாதலால் கடவுளுக்கு இரண்டாவதாய் குருவுக்குக் கடமைப்பட்டிருக்கின்றனென்பதையும் அறிகின்றான்.

இவ்வாறு, தான் செய்யவேண்டிய கடமைகள் உணர்ந்தபின்னர் யௌவனப் பருவத்தில் இல்வாழ்க்கையில் அமைந்து வாழ்க்கைத் துணைவியும் தானும் பந்து மித்திரர்களுக்கு எவ்வாறு நடக்கவேண்டும் என்று அறிந்துகொண்டு அவர்களுக்கு இனிமை பயக்குமாறு ஒழுகுகின்றனன். இங்ஙனம் ஒருவன் ஒழுகானேல் பற்பல துன்பங்களுக்கு ஆளாய், வருந்துவன் என்பது திண்ணம். தாய் தந்தைக்கு நன்மை தாராதவன் உயிர்த்துணைவிக்கும் பயன்படான், தான் பெறும் மக்களிடத்திலும் சுயநலத்தைக் கருதி அவர்களுக்குத் தக்கவாறு நன்மை உண்டாக்கான். இச்சுயநலம் என்னும் பேய்பிடித்தாட்ட உலகாயதனாய், தேகமே ஆன்மா என்றும் போகமே முத்தியென்று விடயங்களில் ஆழ்ந்து, உழன்று, பற்பல பாவங்களைச் சம்பாதித்து உலகத்தாரால் பழிக்கப்பட்டு நரகத்திற்காளாவான். மோட்ச சாதனம் என்னும் மரம் செழித்து ஓங்கி வளரவேண்டுமானால், விளையும் பயிர் முளையில் காணவேண்டும் என்பது போல இல்லறத்தில் சற்புத்திரனா? சற்புருடனா? என்று முதலில் காணவேண்டும். சற்புத்திரன் அன்றேல் இல்லத்தில் அறம் நடவாது, மறமே ஓங்கும். அவன் இல்லம் ஊர் என்னும் உடம்பிற்கு ஒரு வியாதிபோலாம்.

ஆகையால் கடவுளுக்கு உழைக்கவேண்டிய கடமை நமது இல்லத்திலேயே ஆரம்பிக்கின்றது. பஞ்சாக்ஷர மந்திரத்தை "இல்லகவிளக்கு" என்றார் அப்பர். ஆதலால் உலகத்திற்கு நாம் உழைக்க வேண்டுமென்பது, தாய் தந்தையரையும் மனைவி மக்களையும் காற்றில் அலையவிட்டுப் போகவேண்டுமென்பதல்ல. ஆயினும் இல்லத்திலுள்ள தாய் தந்தை

---

* இரப்பவர்க்கீய வைத்தாரீபவர்க் கருளும் வைத்தார்
கரப்பவர் தங்கட் கெல்லாங் கடு நரகங்கள் வைத்தார்
பரப்புநீர் கங்கைதன்னைப் படாசடைப் பாகம் வைத்தா
ரரக்கனுக் கருளும் வைத்தாரை யணையாநனுரே.

—அப்பர்—

அறம் என்பது, ஈதல் என்றாள் ஔவை.

ஈதலாவது, நமது என்பதைப் பிறர்க்குப் பிரதிபலன் எதிர்பாராமற் கொடுப்பது. பிரதிபலன் எதிர்பார்த்துக்கொடுப்பது வணிகமாகும் அது ஈதலாகாது. ஆதலால், இல்லறமென்னும் பதத்திற்குப் பொருள் இல்லத்தில் நடத்தும் அறம் என்பதாகும்.

யருக்கும், மனைவி மக்களுக்கும் தன்னைச்சார்ந்த உறவினருக்கும் ஊணளிப்பதும் அவசியமான உதவிகளை இயன்றவாறு செய்வதும் மிகுதியான காலம், பொருள், சக்தி இவற்றை மன்பதைகளுக்கு மறக்காது செய்வதும் கற்றோன் கடமையாம்.

இல்லத்திற்குப் புறம்பில் நடத்தும் அறமும், இல்லத்திற்கு அகத்தே நடத்தும் அறமும், இல்லறங்களே. தெருவில் வரும் பிச்சைக்காரனுக்கு அன்னமளிப்பதும் ஒருவித இல்லறமே. தன்மகவுக்கு நல்வழியிற் செல்லப் பழக்கும் கல்வி முதலிய ஒழுக்கங்களை ஊட்டலும் ஒருவித இல்லறமே. தாய் தந்தையைப் பேணலும், விருந்தோம்பலும் ஒருவித இல்லறமே; ஏனெனில் இக்காரியங்களின் புண்ணியவசத்தால் ஒருவன் இம்மையிலும் மறுமையிலும் பயனை அனுபவிப்பானுயினும் பிரதிபலனை எண்ணுது செய்யும் காரணத்தால் இவையாவும் ஈகையேயாம்.

மனிதன், புத்தி அறிந்தது முதல் வாழ்நாள் யாவும் கழியும் வரையில், இல்லறத்தில் பற்பலகடமைகள், காலம், இடம், தேசங்களுக்குத் தக்கவாறு செய்ய நேருகின்றனன். அவற்றில் எவ்வளவு விசேஷமாகச் செய்வானே அவ்வளவு விசேஷத் தெய்வத்தன்மை பெறுகின்றனன். ஒருவிளக்கானது பெரிய வெளியில் நாட்டப்படுமாயின், அதற்கு அருகிலுள்ள பொருள்களை விசேடித்து விளங்கச்செய்யும். போகப்போக அவ்வளவு பிரகாசம் தராவிடினும் அதன் ஒளியானது வெகுதூரம் பரவுகின்றது. அதுபோலவே, இல்லறத்தில் தன் கடமைகளைச் சரிவர நடாத்துவோன் உலகத்திலுள்ள ஒவ்வொருவருக்கும் தன்னால் இயன்ற அளவு கொஞ்சமேனும் உழைக்கா தொழியான். இதுவே தேச உழைப்புக்குக் காரணம் தேசபந்து என்னும் பட்டமும் இவனைச் சாரும்.

(தொடரும்)

வித்தையிற் சிறந்த விற்பன விவேகிகாள்!

நீங்கள் "விவேகபாநு"வை ஆதரிக்கவேண்டாமா? அதற்கு என்ன செய்யவேண்டு மென்பதை நாம் சொல்லவும் வேண்டுமோ? நாம் சொல்லாமலே நீங்களே ஏன் தெரிந்து ஏற்றது செய்யக்கூடாது? இனியேனும் தெரிந்து உதவிபுரிந்து பாநுவை ஆதரிக்கவும்!

309

:: நமது கதைப் பக்கம் ::

கரிசூழ்ந்த மங்கலம், ஸ்ரீ ஆனந்தகானசபை மானேஜர்,

ஸ்ரீமான் டி. கே. ஹரிஹரபுத்ர சர்மா எழுதுவது

பணத்தால் வந்தகேடு

அல்லது

ஹரிஹரனின் ஆர்ப்பாட்டம்

(முன்தொடர்ச்சி)

(சதியாலோசனை) **(அத்தியாயம்-3.)**

முந்திய அத்தியாயத்தில் பண்ணை அய்யர் அவர்கள் கண்ணோடு கண் மூடாமல் சிந்தாகுலம் அடைந்தார் என்று கூறினோமல்லவா? அவர்படும் அவஸ்தை நிமிஷத்திற்கு நிமிஷம் அதிகப்பட்டது. ஒரு கால் தன்மீது பொறுமையாலே தன்னுடைய பழைய எஜமானனே தன்னை வருத்தப்படுத்த இப்படி ஏதாவது ஒரு தந்திரம் செய்திருப்பாரோ? அல்லது கேசவபுரத்து குடிகளை அவருக்கு நன்றாய் தெரியுமாதலால் அவர்களுடைய தொந்தரவை சகிக்க முடியாமல், அவர்களுக்காக நன்மை செய்யும் பொருட்டு தன்னிடம் பேசவந்தாரா? அல்லது நம்முடைய யோக்கியதையை அறியவந்தாரா? ஒன்றும் தெரியவில்லையே! என்று பலவாறாக யோசித்துக்கொண்டே நன்றாய் குரட்டைவிட்டுக்கொண்டு தூங்கிவிட்டார். இவர் இப்படியிருக்க வெளியில் சென்ற குடிகளைப்பற்றி சற்றுகவனிப்போம். மங்கலபுரத்திற்கு மூன்று மைலுக்கு அப்பால் ஒரு காளிகோவில் உண்டு. அங்கே எப்பொழுதும் திருடர்கள் கூடுவதுண்டு. அவ்விடத்திற்கு வரும் மனிதர்களை வழிப்பறிசெய்து கொலையும் செய்வது வழக்கம். அந்த கோவிலின் பக்கங்களில் ஆகாயத்தை ஓங்கி வளர்ந்திருக்கு மூங்கில் புதர்களுண்டு. அதனால் அவ்விடத்தில் சூரிய பிரகாசமே தோன்றாமல் எப்பொழுதும் இருட்டாகவே இருக்கும். அந்த காளிகோவில் கேசவபுரத்தில் வசிக்கும் குடிகளுக்கு குலதெய்வம். ஆகையினால் எல்லாகுடிகளும் ஒன்று சேர்ந்து தங்கள் குறைகளை காளியினிடம் சொல்லி அம்மனுடைய உத்

திரவுபோல் செய்யலாமென்று நினைத்து அந்த கோவிலின் முன்னிலையில் சென்றார்கள். போகும்போதே அவர்களில் சிலருக்கு கோபம் அதிகமாக வந்ததினால் பண்ணை அய்யர் வீட்டுத்தொழுவத்தில் கட்டப்பட்டிருக்கும் சில எருமை கிடாக்களையும் ஓட்டிக்கொண்டு போனார்கள். அச்சமயம் சுமார் இரவு 1-மணியிருக்கும். திதியோ அமாவாசை; வெளிச்சம் என்று சொல்வதற்கிடமில்லை. போகும்வழியில் ஒரு ஆறு உண்டு. அவ்வாற்றில் எல்லாரும் ஸ்நாநம் செய்துவிட்டு காளிமுன்னிலையில் வரிசை வரிசையாக வந்து நின்றார்கள். அச்சமயம் அவர்களை நோக்குங்கால் யாராவது எதிரில் நின்றால் அப்பொழுதே பஸ்மீகரந்தான் என்றால், இவர்களுக்குப் பண்ணை அய்யர்மீது எப்பேர்ப்பட்டகோப மிருக்கும் என்பதை இதை வாசிக்கும் நண்பர்களே ஊகித்துக்கொள்ளவேண்டும். அவர்களின் தலைவன் பெயரோ வீரன். அவன் வழக்கம்போல் பூஜை முதலானதுகளை கொடுத்துவிட்டு, கொண்டுவந்திருக்கும் எருமைக்கிடாவில் பத்து எருமைக்கிடாவை காளிக்கு பலியும் கொடுத்தான். உடனே அவன்மேல் ஆவேசம் வந்துவிட்டது, ஆடினான், பாடினான், குதித்தான், ஒன்றும் தெரியவில்லை. கடைசியாய் எல்லாரும் அவனைச் சேர்த்துக்கொண்டு வரம் கேட்டார்கள். அப்பொழுது அவன் சொல்லுகிறான்.

"அந்த அய்யரு நம்மளை மோசம் பண்ணினாறு, அவரை விடாதேங்க நானுச்சு. கொள்ளையிடுங்க வீடு, மாடு, தோட்டம் அல்லாத்தையும் நாசமாக்குங்க, இல்லாட்டாக்கே நான் உங்களை விடமாட்டேன். ஜாக்கிரதை, எல்லாம் உங்களுக்கு நல்லகாலம் வந்திருக்கு" என்று சொல்லிவீட்டு அம்மன் சன்னதியில் விழுந்து நமஸ்காரம் செய்தான்." உடனே எல்லாரும் காளியைச் சுற்றி மூன்று பிரதக்ஷணம் வந்தார்கள். என்ன செய்வதென்று யோசனைபண்ணிக்கொண்டு பண்ணை அய்யர் வீட்டை நோக்கி சிலர் புறப்பட்டார்கள். சிலர் நெல்லுச்சேரை உத்தேசித்துப் புறப்பட்டார்கள். சிலர் தோப்புகளுக்குச் சென்றார்கள். அவரவர்கள் தங்கள் தக்களுக்கு ஏற்படுத்தியிருக்கும் வேலையைச் செய்ய ஆரம்பித்தார்கள். தூங்கிக்கொண்டிருக்கும் பண்ணை அய்யர் எழுந்திருக்கவிடாதபடி அவர் படுத்திருக்கும் இரும்பழிக் கொட்டகையை நன்றாய் பந்தோபஸ்தாக காவலில் இருந்தார்கள் இன்னும் சிலபேர் அயல் மனிதர்கள் வராதவண்ணம் சுற்றிச் சுற்றி காவல் செய்துக்கொண்டிருந்தார்கள். கொல்லைப் பக்கத்தில் அமைக்கப்பட்டிருக்கும் சுவற்றில் கன்னம்போட்டு திருட்டு நடப்பதால் அங்கே ஒருவரும் போகாதபடி எச்சரிக்கைசெய்து வந்தார்கள். கோடைகாலமான

படியால் எல்லா ஜனங்களும் வாசத்திண்ணைகளில் தூங்கிக்கொண்டிருந்தார்கள். உள்ளே உள்ள சாமான்களை கொள்ளையிட, இவர்கள் மிகவும் சாமர்த்தியமாய் திருட்டுசெய்து கொண்டு ஊருக்குப்புறப்படத் தலைப்பட்டார்கள். போகும்போது தங்களுக்கு உதவியாக வைத்துக் கொண்டிருந்த நெருப்புப் பந்தத்தை வைக்கோல் போரின்மேல் வைத்து எறித்துவிட்டுப் போனார்கள். இவர்கள்போய் அரை நிமிஷத்திற்கெல்லாம் நெருப்பு வைக்கோல் போரைப் பற்றிக்கொண்டது. அப்பொழுது விடிய ஆறு நாழிகை யிருக்கும். எல்லாரும் ஓட ஆரம்பித்தார்கள். பண்ணை அய்யர் எழுந்து அங்குமிங்கும் ஓடினார். வைக்கோல்போரை வந்து பார்த்தார் வாயிலும், வயிற்றிலும், அரைந்து கொண்டு நிற்கிறார். அந்த ஊரிலுள்ள ஜனங்களும் எழுந்து இவ்விடத்திற்கு வந்து சேர்ந்தார்கள். அக்னிபகவான் யாதொரு தடையுமின்றி காற்றுடன் போஜனம் செய்துகொண்டிருந்தார்.

அத்தியாயம் - 4

ஊருக்குக் கொண்டாட்டம் அய்யருக்கு திண்டாட்டம்

ஒருவருக்காவது நம்முடைய அய்யருக்கு இப்படி வந்ததே என்ற வருத்தம் கொஞ்சங்கூட கிடையாது. இவர் ஊரில் செய்யுங்கொடுமையினால் ஊர் ஜனங்கள் எல்லாருக்கும் உள்ளூர சந்தோஷந்தான் கோடைகாலமானதினால் குளங்குட்டைகளில் ஜலம் கிடையாது. சில கிணறுகளில் ஜலம் உண்டு, அவைகளிலிருந்து தண்ணீரை மொள்ளுவதற்குக் குறைந்தது நூறுபாகம் கயிறு வேண்டும். சூரியன் உதயமானவுடன் காரியமெல்லாம் நன்றாய் துலங்கிற்று. அய்யரவர்கள் கட்டிக்கொண்டிருந்த மல் துணியைத் தவிர மீதெல்லாம் களவுபோய் விட்டது என்ற சங்கதியும் எங்கும் பரவிற்று. இவருடைய மூத்த பையனுக்கு ஸமீபத்தில் கல்யாணம் நடந்திருந்ததால் அங்கே புதிதாயிருந்த வெள்ளிப் பாத்திரங்களும், நகைளும், சேலைகளும் களவுபோயிருந்தன. இவைகளை அறிந்த பண்ணை அய்யர் ஸ்தம்பம்போல நின்றார். அவருக்கு இன்னது செய்வதென்று புலப்படவில்லை. காவற்காரர்களுக்கு ஆளை அனுப்பினார். அவர்களும் சரியாக பதில் சொல்லவில்லை. இதைப்பற்றி தெருத்தெருவாக பேச்சு நடந்துகொண்டிருந்தது. இவருக்கு விரோதி அனேகம்பேர்கள் உண்டு. அதில் யாரோ விரோதிகள் செய்திருக்கக்கூடும். அதிலேயும் சேசவபுரம் தேவமார்கள்

தான் செய்திருக்கலாம். ஆனல் அவர்கள் கூட அவ்வளவு அக்கிரமம் செய்யத் துணியமாட்டார்கள். இருந்தாலும் அவர்களுள் சிலரும் கெட்டவர்கள் சேர்ந்து இந்த காரியத்தைச் செய்திருக்கக் கூடுமென்றும், அதிலும் முக்கியமாக நமது பண்ணையரான இராமநாதனும் இதில் சம்பந்தப்பட்டிருப்பானென்றும் தீர்மானம் செய்துகொண்டார். தனக்கு இவ்வளவு களவுபோனதென்று நிச்சயமாய் சொல்லமுடியாதென்றும் தனக்கு எதேஷ்டமான பணமிருப்பதால் எவ்வளவு களவு போயிற்று என்ருலும் ஜனங்கள் நம்புவார்களென்றும் இராமநாத அய்யரை எப்படியாவது இந்த கேசில் சேர்த்துவிட்டால் தனக்கு களவு போன பணத்தைக் காட்டிலும் அதிகமான பணம் தனக்கு வந்துவிடுமென்றும் பலவாறு யோசித்தார். ஆனல் பண்ணை இராமநாதையரை குறித்து வெளியில் அவதூருய் சொல்லவும் பயம். சொல்லாமலிருந்தால் பணம் சம்பாதிக்க முடியாது. எப்படியாவது தப்போ, பொய்யோ சொல்லி, அவரையும் இதில் சேர்த்துவிட்டால் அவர் பணத்தை கொடுத்து சமாதானம் பண்ணிக்கொள்வார். அவருடைய தயவில் நமக்கு ஆகவேண்டியது ஒன்றுமில்லை என்று பலவாருக யோசித்துக் கடையாக மங்கலத்திற்கு மேற்கே இரண்டு மைல் தூரத்திலிருக்கும் போலீஸ் ஸ்டேஷனுக்கு ஒரு ஆளைச்சொல்லி யனுப்பி அங்கிருந்து சில போலீஸ் உத்தியோகஸ்தர்கள் தங்களுக்கேற்படுத்தி யிருக்கும் காக்கி சட்டையுடனும், சிகப்பு தொப்பிகளுடனும், மற்றுமுள்ள இரகசிய போலீஸார் (C. I. D) உடையன்னியில் சாதாரண உடையுடனும் மங்கலபுரத்தை யடைந்தார்கள். அவர்கள் வந்ததும் ஊர் முழுவதும் சமாச்சாரம் பரவியிற்று. நமது பண்ணை அய்யர் அவர்களின் மனமும் சாந்தமடைந்தது. சப் இன்ஸ்பெக்டரிடம் சுமார் இரண்டுமணிநேரம் வரை நடந்த சமாச்சாரங்களைப்பற்றி சவிஸ்தாரமாக பேசிமுடித்தார். உடனே சப் இன்ஸ்பெக்டர் தான் அப்படி ஒரு நிமிஷத்தில் செய்து முடிப்பதாயும், தனக்குக்கூட அப்படி செய்வதுதான் சரியென்று தோன்றுவதாயும், அதற்கு வேண்டிய ஒத்தாசையை செய்யவேண்டுமென்றும், அப்படி செய்தால் அய்யரவர்களை உள்ளேகொண்டுபோய் தள்ளிவிடுவதாயும் (அதாவது ஜயிலில் போடும்படி செய்வதற்கு போலீஸ்காரர்கள் உபயோகிக்கும் நயனபாஷை) அதற்கு நானிருக்கிறவரையில் பயப்படவேண்டாமென்றும், அய்யரவர்களுக்கு தைரியம் சொன்னர். அப்போது அய்யர் தனது வாக்குமூலமான ஒரு சிறு காகிதத் துண்டை நீட்டினர். அவர் பாராதவண்ணமாக நின்றர்.

(இன்னும் வரும்)

கைத்தொழில் பகுதி

கைராட்டினத்தின் சிறப்பு

டாக்டர் பி. சி ராய் சமீபத்தில் பம்பாய்க்கு விஜயம் செய்தபோது நெசவுக்காரர்களிடம் சென்று கத்தர் இயக்கத்தில் தமக்குள்ள நம்பிக்கையைப்பற்றி விவரித்துக்கூறினர். அவர் கூறிய அபிப்பிராயத்தின் சாராம்சமாவது:— நான் எப்போதும் போலவே கை ராட்டினத்தில் அதிக நம்பிக்கையுடையவனக இருக்கின்றேன். பம்பாயில் மட்டும் சுமார் 83 மில்கள் இருக்கின்றன. ஆமதாபாத்திலும் அவ்வளவு மில்களே இருக்கின்றன. இந்த இரண்டு நகரங்களிலுமாக மொத்தத்தில் 300 அல்லது 400 லட்சம் தொழிலாளர்கள் வேலை செய்கின்றனர் மேலும் ஹூக்ளி நதிக்கரையில் 85 சணல் மில்கள் இருக்கின்றன. கான்பூரிலும் மற்ற இடங்களிலும் பல மில்கள் இருக்கின்றன எனவே நம் நாடு முழுதும் கவனித்துப்பார்த்தால் மொத்தத்தில் ஒன்றரை கோடி தொழிலாளர்கள் மில்களில் வேலைசெய்கின்றனர்.

அவ்வாறிருக்க சில அரசியல்வாதிகள் ராட்டின இயக்கத்துக்கு விரோதமாகப் பல குறைகள் கூறி வருவதன் அர்த்தம் எனக்கு விளங்கவில்லை. அப்படிப்பட்டவர்கள் மின்சார விசிறியின்கீழ் உல்லாசமாகக் காற்று வாங்கிக்கொண்டு வாய்பேச்சு வீரம்மிக்க தேசிய வாதிகளாகவே இருத்தல் வேண்டும். கைராட்டினத்துக்கு இணையாக வேறேதேனும் உண்டோ என்பதை அவர்கள் அனுஷ்டானத்தில் காண்பிக்க முடியுமா! ராட்டினங்களை ஒவ்வொரு கிராமத்திலுமுள்ள ஒவ்வொரு வீடுகளிலும் எளிதில் பரவச் செய்துவிடலாம். மேலும் அவர்கள் இந்தியாவும் இங்கிலாந்து அல்லது வேறு ஐரோப்பிய தேசமல்ல என்பதை மறந்து விடுகிறார்கள். இங்கே கோடிக்கணக்கான மனிதசக்தி வருஷா வருஷம் ஐந்தாறு மாதங்கள் வீணைக் கழிகின்றன என்பதை ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டும். அவர்களுக்கு வேலைகொடுத்து அவர்கள் இருப்பிடங்களாகிய கிராமங்களையும் பம்பாயும், கல்கத்தாவுமாகச் செய்துவிட வேண்டாமா?

இதனால் விளங்குவதென்ன? இந்திய மககளின் ஆடைகளுக்கு வேண்டிய நூலையும் துணியையும் மில்களின் உதவி இன்றியே கைராட்டினத்தின் உதவியாலேயே தயாரித்துக் கொள்ளலாம் என்பது அல்லவா? ஒன்றரை கோடி தொழிலாளர்களும், கிராமங்களில், விவசாயிகளும், செல்வந்தர்களின் வீட்டுப் பெண்களும், வேறு பல வேலையில்லாச் சோம்பேறிகளும் தினம் 3-மணிநேரம் நூல் நூற்றாலும் மேற்கூறியபடி ஆடைகள் தயாராகுமென்பதில் சந்தேகமென்ன இருக்கிறது? கேவலம் ஆடைகளுக்காகப் பிறநாட்டாரையும், பிறநாட்டு மில்களையும் எதிர்பார்த்துக்கொண்டிருப்பது வெட்கக்கேடான காரியமேயாகும். நூல் நூற்கப் பிரியமில்லாதவர்களும் கத்தர் ஆடைகளையே வாங்குவதென்று தீர்மானித்தாலும் போதும். ஆதரிப்பவர்கள் இருந்தால் எந்தத் தொழிலும் தானாகவே அபிவிருத்தியடைந்துவிடும். விலை அதிகமென்றும் ஆடைகள் பார்வைக்கு ரம்மியமாக இருப்பதில்லையென்றும் சாக்குப்போக்குச் சொல்வதெல்லாம் வெறும் அறியாமையேயாகும். அபிமானம் காரணமாகக் குற்றங் குறைகளைப் பாராட்டலாகாது. ஆதலின் நம் நாட்டு மக்கள் அனைவரும் தத்தம்மாலியன்றவரை கைராட்டினத்தையும் கத்தரையும் கைக்கொள்வார்களென்று நம்புகிறோம்.

வைத்தியப் பகுதி

சிசு வைத்தியத்தில் கைதேர்ந்த பிரபல வைத்தியர்கள், ஒரு குழந்தையின் ஐந்தாவது வயதுவரை அக்குழந்தைக்கு எத்தகைய வியாதியும் வராதவாறு மிக ஜாக்கிரதையுடன் காப்பாற்றிவிட்டால் பிறகு அக்குழந்தையின் ஆயுள் முழுதும் நல்ல திடகாத்திரமிருக்குமென்றும், எத்தகைய வியாதியும் அணுகாதென்றும் கூறுகின்றனர். உபாயமான வியாதிகளை ஆரம்பத்திலேயே சொஸ்தப்படுத்தாமையால் தான் நமது வியாதிகள் அதிகரித்து மிக்க அபாயத்தை உண்டாக்கிவிடுகின்றபடியால் வெள்ளம் வருவதற்கு முன் அணைபோடுவதேபோல் வியாதி அதிகரிக்கு முன்னரே ஆரம்பஸ்திதியிலேயே அதை சொஸ்தப்படுத்திக்கொள்ளவேண்டும். இன்றேல் நகத்தால் கிள்ளி எறிவதை விடுத்து கோடாறிகொண்டு வெட்டவேண்டிய அவசியம் ஏற்பட்டுவிடும்.

முக்கியமாக நாம் நமது குழந்தைகளைக் கவனிக்கவேண்டும் தினந்தோறும் காலையில் எழுந்ததும் குழந்தைகளின் முகத்தை நிதானமாக உற்று நோக்கவேண்டும். சாதாரணமாக இருப்பதை விடுத்து ஏதேனும் உபாயமான மாறுதலைக் கண்டபோதிலும் உடனே அதற்கு காரணமென்னவென்று ஆராய்ச்சி செய்து அதற்குத்தக்க பரிகாரமும் செய்துவிடவேண்டும். சாதாரணமாக, சிறுகுழந்தைகளுக்கு அடிக்கடி ஜலதோஷம், உபாய ஜுரம், பூச்சிக்கடி, காதுவலி முதலியவைகளே ஏற்படுவதுண்டு. ஜலதோஷம் ஆரம்பமாவது தலையிலிருந்துதான். ஆதலின் முதற்குறி காணப்பட்டதுமே உடனே குழந்தையைத் தக்க வைத்தியரிடம் அழைத்துச் சென்று அதற்கான பரிகாரம் செய்யவேண்டும். வீட்டிலேயே சொஸ்தப்படுத்திக்கொள்ளவேண்டுமாயின் பரிசுத்தமான கற்பூரத் தைலத்தில் தோய்த்த கம்பளித்துணியை மூக்கினிடம் வைத்து அதை உட்பக்கம் சுவாசிக்கும்படி செய்வதால் குழந்தை சொஸ்தமடையும். எதையும் வைத்தியரிடம் கேட்டு அவர் யோசனைக்கிணங்க நடந்துக்கொள்வதே சிலாக்கியமாகும். குழந்தைகளுக்குக் குறித்த காலத்தில் ஆகாரமளித்தல் வேண்டும். தாய்க்கு ஓய்விருக்கும்போது தான் குழந்தைக்கு ஆகாரம் கொடுப்பதென வைத்துக்கொண்டு கால கிர்ணயம் தவறி ஆகாரம் கொடுத்தால் குழந்தைப்பருவம் முதலே சரியாக ஜீரணமாகாமல் மலச்சிக்கல் ஏற்படக்காரணமாய்விடும் பெரியவர்களுக்கே மலச்சிக்கல் கூடாதென்றால் குழந்தைகள் விஷயத்தில் எவ்வளவு ஜாக்கிரதையாக இருக்கவேண்டுமென்பதைப்பற்றி யாம் அதிகம் கூறவேண்டுவதில்லை. குழந்தைகளை வளர்ப்பவர்கள் தாய்மார்களேயாதலின் அத்தாய்மார்கள் சிசுபரிபாலன முறைகளைப் பற்றியும் சிசு வைத்தியத்தைப் பற்றியும் சிறிதளவேனும் அறிந்திருத்தல் அத்தியாவசியமாகும்.

"விவேகபாநு" அன்பர்களுக்கு

அன்பர்காள் !

நமது பாநு உதையமாகி இத்துடன் எட்டு மாதங்களாகின்றன. நாம் இதுகாறும் சந்தாவையேனும், வேறு எவ்வித வருமானத்தை யேனும் எதிர் பாராமல் பத்திரிகையை நடாத்திவந்திருக்கிறோமென்பது அன்பர்கட்கு நாம் சொல்லாமலேவிளங்கும். மேலும் மேலும் நம் பாநுவைச் சிறந்த முறையில்நடத்துதற்குச் சந்தா நேயர்களின் ஊக்கத்தை பொறுத்திருக்கிறது. இதுவரை நம் பாநுவைப் படித்தின்புற்ற அன்பர்கள்சந்தா ரூபாயை அனுப்பி நமக்குப்போதிய ஊக்கத்தை உண்டுபண்ணும்படிக் கேட்டுக் கொள்ளுகிறோம்.

பத்திராதிபர்.

ஓர் இனிய சம்பாஷணை

தீண்டாமை ஒழித்தல் மகா நாடு

இது 10—2—29 ஞாயிற்றுக்கிழமை மாலை சென்னை பச்சையப்பன் கல்லூரிக்கருகில் இரு நண்பர்களிடையே நடந்த உண்மை சம்பாஷணையாகும். இதை நேயர்கள் ஊன்றிப் படிப்பார்களாக.

கோபாலசாமி:—தனது நண்பன் வெங்கடேசனைப் பார்த்துப் பின்வருமாறு கேட்கிறான்? "என் பிரதர்! இன்று பச்சையப்பன் கல்லூரி மண்டபத்தில் கூடிய தீண்டாமை ஒழித்தல் மகா நாட்டில் நிறைவேறிய தீர்மானங்களைப்பற்றித் தங்கள் அபிப்பிராயமென்ன?

வெங்கடேசன்:—"என் அபிப்பிராயமா நிறைவேறிய தீர்மானங்களில் எனக்கு நம்பிக்கை இல்லை. நான் தீண்டாமையை ஒழிக்கவேண்டுமென்னும் கட்சியைச் சேர்ந்தவன். என் சம்பந்தப்பட்ட வரையில் அதை ஒழித்தே விட்டேனென்றும் கூறலாம். ஆனால் இன்று நிறைவேறிய தீர்மானங்கள் வெறுங் காகிதத் தீர்மானங்களே ஏனென்றால் தீண்டாமையை ஒழிப்பதற்கான முக்கிய முறையை அனுஷ்டானத்தில் கொண்டுவர முயற்சிக்காமல் காபிஹோட்டல்களிலும், கோவில்களிலும், மோட்டார் பஸ்களிலும் மற்ற ஜாதியினரைப்போல அவர்களுக்கும் சுதந்தரம் கொடுக்கவேண்டும் என்று சொல்வது முடியாத காரியம்."

கோபாலசாமி:—"ஏன் முடியாது? நீர் என்னதான் செய்யவேண்டுமென்று நினைக்கிறீர்கள்? விவரமாகச் சொல்லுங்கள் பார்ப்போம்.

வெங்கடேசன்:—தீண்டாதவர்களென்போரும் ஹிந்துக்களே என்று நாம் ஒப்புக்கொண்டு விட்டபடியால் அவர்களுக்குத் தக்க கல்வியையும், ஒழுக்கத்தையும், நாகரிகத்தையும்போதித்து அவர்களைப் பொருளாதார நிலையில் சிறிது உயர்த்தி நமக்குள்ள அந்தஸ்தில்

அவர்களும் இருக்கும்படி செய்துவிட்டால் மற்றவைகள் தானாகவே கிடைத்துவிடும். இச்சென்னைபோன்ற நகரங்களில் எத்தனையோ ஆதி திராவிடர்கள் தங்கள் நடை, உடை, பாவனைகளால் உயர்ஜாதி ஹிந்துக்களைப்போல் நடித்து எல்லா ஹோட்டல்களிலும் நுழைவதை நான் பார்த்திருக்கிறேன். அப்படிப்பட்டவர்கள் வருவதில் எனக்கும் சர்வ சம்மதமே. அந்த நிலைமையில் அனைவரும் இருக்கும்படி செய்யவேண்டுமாயின் கிராமங்களுக்குச் சென்று தீண்டாமை ஒழித்தல் பிரசாரம் செய்வதுடன் அவர்களை முன்னேற்றுவதற்கேற்ற முறைகளையும் கோலிக்கொண்டு வேலை செய்யவேண்டும். மேலும் காபி ஹோட்டல்களும் மற்ற இடங்களும் ஒழுக்க அபிவிருத்திக்கு ஏற்றதல்லவென்று அறிஞர்கள் கருதும்போது அப்படிப்பட்ட இடங்களில் புக அவர்கள் உரிமை கேட்பது அவசியமில்லை.

கோபாலசாமி:— இந்த மகாநாடு பயனளியாது என்றால் யார்தான் தீண்டாமை ஒழித்தலுக்காக உண்மையில் பாடுபட்டு வருகிறார்களென்று நீங்கள் நினைக்கிறீர்கள்.

வேங்கடேசன்:—'உண்மையில் சரியான துறையில் யாரும் உழைப்பதில்லைதான். ஆனால் கல்கத்தா, காங்கிரசில் நிறைவேறிய தீர்மானத்தை எல்லா காங்கிரஸ் கமிட்டிகளும் ஒழுங்காக அனுஷ்டிக்க முயன்று, நிர்மாண வேலைகளில் ஈடுபடுவார்களாயின் சொற்ப காலத்திற்குள் தீண்டாமை ஒழிந்துவிடும்.

கோபாலசாமி:—"ஆனால் இம்மகாநாட்டினால் உங்களுக்கு திருப்தி ஏற்படவில்லை போலும் இன்னும் இதைப்பற்றி உங்கள் அபிப்பிராயமென்ன?

வேங்கடேசன்:—"திருப்தி இல்லாமலில்லை தலைவர் ஸ்ரீமதி கங்குலி வரவேற்புத் தலைவர் ஸ்ரீ கிருஷ்ணராவ் பான்ஸ்லே முதலியவர்களின் பிரசங்கங்கள் மிக்க அறிவுறுத்தலாகவே இருக்கின்றன: அவைகளைக் கேட்பதாலும் படிப்பதாலுமே எவ்வளவோ நன்மை உண்டு இம்மகாநாட்டுக்கு காங்கிரஸ்காரர்கள் வராதது ஒரு பெருங்குறை என்றே நினைக்கிறேன். இதனாலாவது ராஜீய அபிப்பிராய பேதத்துக்காக சமூக சீர்திருத்தத்தைக் கைவிடலாகாதென்பதும், இருகட்சியினரும் ஒத்துழைத்தால்தான் நன்மைவிளையுமென்பதும் தெரிகிறதல்லவா?

இருவரும் புறப்பட்டுப் போய்விட்டார்கள்.

மதிப்புரை

சித்தாந்தம்:—இது சென்னை சைவசித்தாந்த மகாசமாஜத்தாரால் வெளியிடப்படும் மாதவெளியீடு. இது சைவசமயத்தின் முன்னேற்றத்தைக் கருதி வெளியிடப்படுவதென்பது இதில் பிரசுரமாகும் வியாசங்களால் ஈண்டு தெரிகின்றது. இதன் ஆசிரியர் திருவாளர் ம. சுப்ரமண்ய முதலியார் பி. ஏ. பி எல்., அவர்களாவர். எமது பார்வைக்கு 2 வது மலரின் இரண்டாவது இதழ் கிடைக்கப் பெற்றோம். அதில் வெளியாயிருக்கும் சமயத்தின் சாரம் என்னும் வியாசத்தில் அதன் ஆசிரியர். திரு. கி. எஸ். சுவாமிநாத முதலியார் அவர்கள், "மக்கட் குலத்தினரையெல்லாம் தன் சொந்த சகோதரர்களாகக் கருதி அவர்களுக்குத் தொண்டு இயற்றும் மனிதன் ஒருவன் உண்மைச் சமய வாழ்வு நடத்துபவனுவான்" என்றும், "சாதி, சமயம், நிறம், ஆண், பெண், முதலிய வேற்றுமைகளைப் பாராட்டாமல் மக்கள் அனைவரிடத்தும் அன்பும் நேயமும் சகோதர பாவமும் பூண்டு வாழ்வோன். ஆகிய இத்தகையவனே உண்மைச் சமயவாழ்க்கை நடத்துவோனுவான்" என்றும் கூறியுள்ளதை சைவ நன்மக்களுக்குமட்டுமன்றி சமயத்தின் பெயரால் உலகில் வாழ்ந்துவரும் அனைவருக்கும் எடுத்துக்காட்டி அத்தகைய உயரிய கொள்கைகளைப் போதிக்கும் இச் செந்தமிழ் பத்திரிகையை சைவர்களே யன்றி எல்லா சமயத்தினரும் ஆதரிக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறோம். வகுப்புவாதத்தையோ, ஜாதியாவேசத்தையோ கிளப்பிவிடக்கூடிய பத்திரிகைகள் பல தோன்றுவதைக் காட்டினும் ஏதோ ஓர் குறிப்பிட்ட சமயத்தின்மீது அஸ்திவாரமக நின்று மற்ற எந்த சமயத்தையும் இகழாமல் சமரசசன்மார்க்கத்தைப் போதிக்க முன் வந்திருக்கும் இந்த சித்தாந்தத்தை தமிழ் மக்கள் அனைவரும் ஆதரிக்கக் கடமைப்பட்டிருக்கிறார்கள் என்று கூறுவது மிகையாகாது. இதன் வருஷ சந்தா இன்னவென்று தெரியவில்லை. இதை ஆதரிக்க விரும்பும் அன்பர்கள் சென்னை கோவிந்தப்ப நாய்க்கன் தெரு, 150-வது எண். கட்டடத்திலுள்ள சைவசித்தாந்த மகாசமாஜக் காரியதரிசிக்கு எழுதிக் கொள்ளலாம்.

வியாபாரிகளுக்கோர் விண்ணப்பம்!

தக்கசமயம்! மிக்கலாபம்!!

விளம்பரஞ்செய்ய நல்ல தருணம்!

இந்தியா, பர்மா, சிலோன், பினங்கு, சிங்கப்பூர், மலாய் நாடுகள், தென்னாப்பிரிக்கா முதலிய விடங்களில் ஏராளமாய் இச்சஞ்சிகையுலாவ ஆங்காங்கு ஏஜண்டுகளை வைத்து இச்சஞ்சிகையை நடத்துவதால், வியாபாரிகள் இதில் விளம்பரஞ் செய்து மிக்க லாபத்தை அடைவார்களாக. வியாபாரத்தில் ஊக்கமுள்ளவர்கள் தங்கள் விளம்பரங்களை நமக்கனுப்பி, பிரசுரிக்கச் செய்வீர்களென நம்புகிறோம்.

விளம்பர விகிதம்

மாதம் 1-க்கு ஒரு பக்கத்திற்கு	ரூபா	8	0	0
,, அரைப்பக்கத்திற்கு	ரூபா	5	0	0
,, கால்பக்கத்திற்கு	ரூபா	3	0	0

எப்போதும் விளம்பரத் தொகையை முன்பணமாகவே கட்ட வேண்டும். நீண்டகாலம் விளம்பரஞ் செய்பவர்களுக்குச் சகாயஞ் செய்யப்படும்.

மானேஜர்—"விவேகபாநு" ஆபீஸ்,
நெ. 20, நம்மாள்வார் தெரு, முதல் சந்து,
சௌகார்பேட்டை, சென்னை.

"இந்தியன்"

ஆசிரியர் ஸ்ரீ K. வெங்கட்டராவ்.

நம் தேசிய மகாசபையாகிய காங்கிரஸின் கொள்கைகளைத் தழுவி நிற்பது. கிராம உத்தியோகஸ்தர்கள், ஆரம்ப ஆசிரியர்கள் முதலியவர்களின் குறைகளைப் பயமன்னியில் எடுத்துரைத்து அவர்களின் நல வுரிமைகளுக்காகவும், முன்னேற்றத்திற்காகவும் தளராதுழைப்பது. இந்திய மக்கள் சுதந்திரமடையும் வழி காட்டுவது. மாதிரிகாப்பி இனாம்.

வருடசந்தா உள்நாடு ரூ. 1-8-0 வெளிநாடுகள் ரூ. 2.

நிர்வாக ஆசிரியர், "இந்தியன்"
அதமன் கோட்டை போஸ்ட், சேலம் ஜில்லா.

"விவேகபாநு" பஞ்சாங்கம்

விபவஸ்ரூ தைமீ

கலியுகாதி—5030; சாலிவாகன—1851;
பசலி - 1338; ஹிஜ்ரி - 1348; கொல்லம்-1104.

இங்கிலீஷ் 1929௵
ஜனவரி — பிப்ரவரிமீ

சுக்	குரு	ராகு	
புத	15-ம-பு 18 கும்-சு		
சனி	கே		

தமிழ் தேதி		இங்கிலீஷ் தேதி	வாரங்கள்	திதிகள்	நட்சத்திரங்கள்	விசேடகாலங்கள்
1	1929௵ ஜனவரிமீ	13	ஞாயி	துதி 5-55	ஸ்ரீவ 3-42	உத்தராயணம்
2		14	திங்கள்	திர 8-14	அவி 7.21	மாட்டுபொங்கல்
3		15	செவ்	சது 9-29	சத 10-0	திருவள்ளூர் தெப்பம்
4		16	புதன்	பஞ் 9-40	பூர 11-36	திருக்கச்சூர் பார்வேட்டை
5		17	வியா	சஷ் 8 44	உத்தி 12-6	பெண்ணையாரில் தீர்த்தம்
6		18	வெள்	சப் 6-35	ரேவ 11-27	மகரம்சுபம்
7		19	சனி	அஷ் 3.14	அசு 9-38	
8		20	ஞாயி	தச 52-58	பர 6-36	கிருத்திகை விரதம்
9		21	திங்க	ஏகா 46.13	* கிரு 2-26	ஸர்வ ஏகாதசி
10		22	செவ்	துவா 38-51	மிரு 51-34	
11		23	புதன்	திர 30-55	திரு 45-25	பிரதோஷம், கரிநாள்
12		24	வியா	சதி 22-52	புந 39-13	கந்தஸ்வாமி கடைசி உற்சவம்
13		25	வெள்	O பௌ 15.1	பூச 33-24	தைபூசம்
14		26	சனி	பிர 7-58	ஆயி 28-23	புஷ்பகுளம்
15		27	ஞாயி	துவி 2-6	மகம் 24-41	திருமழிசையாழ்வார்
16		28	திங்	சது 55.9	பூரம் 22-45	
17		29	செவ்	பஞ் 54-443	உத்ர 22-41	கரிநாள்
18		30	புதன்	சஷ் 56-26	அஸ் 24-4	
19		31	வியா	சப் 60-0	சித் 28-51	அஷ்டகை
20	பிப்ரவரிமீ	1	வெள்	சப் 0-11	சுவா 34-46	
21		2	சனி	அஷ் 5-31	விசா 41-55	
22		3	ஞாயி	நவ 11-57	அனு 40 45	தசமி திதி
23		4	திங்க	தச 18-48	கேட் 57-34	அதிதி
24		5	செவ்	ஏகா 25-32	மூல 60-0	ஏகாதசி திதி
25		6	புதன்	துவா 31.24	மூல 4.54	
26		7	வியா	திர 36-10	பூரா 11-19	மாஸ சிவாராத்திரி
27		8	வெள்	சதி 39.41	உத்ரா 16-33	
28		9	சனி	அம 41-52	ஸ்ரீவ 20-36	அமாவாசை
29		10	ஞாயி	பிர 41-52	அவி 23-24	பிரதமதிதி
30		11	திங்கள்	துவி 42-48	சத 25-7	சந்திரதரிசனம்-துவிதியா திதி

PRINTED AND PUBLISHED BY T. C. NAIDU, AT MURAHARI PRESS,

20, NAMMALWAR STREET, 1ST LANE, SOWCARPET, MADRAS;

மகாமகோபாத்தியாய
வே. சாமிநாதையர்